சேவைப் பணியும் தனியாருக்கு வரிமட்டும் நகராட்சிக்கா?

15 நவம். '95 □ ரூ. 3.50

# புதிய ஜனநாயகம்



## பஞ்சாயத்துகளை ரவுடிகளே கைப்பற்றுவர்

www.padippakam.com



# இந்தியன் எக்ஸ்பிரஸ் - தினமணி:

# ஊருக்கு நீதி ஊழியருக்கு அநீதி

இந்திராவின் அவசர நிலை ஆட்சியையும், ராஜீவின் போஃபார்ஸ் ஊழலையும் எதிர்த்து முற்போக்கு - ஜனநாயக வேடம் தரித்துக் கொண்ட ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' - தினமணி பத்திரிகை நிர்வாகம் தனது தொழிலாளர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மூலம் தோலுரிந்து நிற்கிறது. 1987-ல் தில்லி கிளைத் தொழிலாளர்களின் கூலி உயர்வு போராட்டத்தை கோயங்கா - அருண்சோரி கும்பல் போலீசையும் ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. குண்டர்களையும் ஏவி ஒடுக்கியது. தொடர்ந்து பம்பாய், பெங்களூரில் நடந்த தொழிலாளர்களின் போராட்டத்தையும் அடக்குமுறை, மிரட்டல், சதி, பழிவாங்குதல் நடவடிக்கைகள் மூலம் அடக்கியது. தற்போது நடந்த சென்னை கிளைத் தொழிலாளர்களின் போராட்டத்திற்கு எதிரான தனது அயோக்கியத்தனமான நடவடிக்கைகள் மூலம் மீண்டும் ஒரு முறை அரிதாரம் கலைந்து நிற்கிறது.

நிலுவை போனஸ் தொடர்பாக நிர்வாகத்திற்கும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையே பேச்சு வார்த்தை நடந்து கொண்டு இருந்தபொழுதே சட்டவிரோதமாக திடீரென 24-9-95 அன்று கதவடைப்பு செய்து மிரட்டியது, தினமணி நிர்வாகம். உண்மையில் நிலுவை போனஸைத் தருவதற்கு தேதி தெரிவிக்காமல் அடாவடித்தனம் செய்தது, நிர்வாகத்தினர்தான். தொடர்ந்து அராஜகமாகக் கதவடைப்பு செய்ததோடு தொழிலாளர் நல ஆணையாளர் முன்பு பேச்சுவார்த்தைக்கும் வரமறுத்துத் திமிர்த்தனமாக நடந்து கொண்டது. தொழிலாளர்கள் பணிபுரிந்த செப்டம்பர் மாதச் சம்பளத்தையும் கொடுக்காமல் நிறுத்தி வைத்தது.

வீதிக்குத் தள்ளப்பட்ட தொழிலாளர்கள் சட்டவிரோதக் கதவடைப்புக்கு எதிராக 'எக்ஸ்பிரஸ் குழு தொழிலாளர்கள் நல சங்க'த்தின் கீழ் திரண்டு போராடினர். 3.10.95 அன்று சாலை மறியல் போராட்டம் நடத்திக் கைதாகினர். தொழிலாளர்களின் போராட்டத்தையும் ஒற்றுமையையும் உடைக்க நிர்வாகம் சதி, மோசடிகள் பலவற்றை அரங்கேற்றியது.

தலைமை அலுவலக ஊழியர் என்ற பெயரில் கிளை ஊழியர்களையும் தொழிலாளர்களையும் வேலைக்கு இழுத்துப் போராட்டத்தைச் சீர்குலைக்கும் நோக்கில் ''சென்னை கிளைக்கு மட்டும் தான் கதவடைப்பு, தலைமை நிலையத்திற்கு கதவடைப்பு இல்லை'' என்ற நீதிமன்ற ஆணையைப் பெற்று வந்தது. வீடுவீடாகச் சென்று தனியே சந்தித்து மிரட்டியும் ஆசை காட்டியும் பலரைப் பணியவைத்தது; முதலாளி மனேஜ் குமார் சந்தோலியா, பொது மேலாளர் ஏ.சி. வெங்கடகிருஷ்ணன், மேலாளர் பி.பி.சிங் தலைமையிலான கும்பல். பத்திரிகையாளர்கள் தகுதியில் இருக்கும் ஊழியர்கள் பெரும்பான்மையோர் நிர்வாகத்தின் பக்கம் ஓடிப் போனார்கள். இத்தனைக்கும் இந்த பத்திரிகையாளர்களுக்கு மட்டும் ஒருமுறை காரம் - இனிப்புப் பொட்டலம் தரமறுத்த நிர்வாகத்தினருக்கு எதிராகத் தொழிலாளர்கள் குரல் கொடுத்து அன்று ஒற்றுமையாக நின்றனர். இருந்தும் தற்போது பத்திரிகையாளர்கள் ஓடிப்போய் துரோகமிழைத்தார்கள். தொழிலாளர்களில் சிலரும் துரோகிகளாகவும் கருங்காலிகளாகவும் நிர்வாகத்தின் பக்கம் போனார்கள். சில தொழிலாளர்களுக்கு ஐந்து நட்சத்திர விடுதியில் அறை எடுத்துக் கொடுத்து பல சலுகைகளைச் செய்து கொடுத்து ஆசை காட்டி மற்றவர்களையும் இழுக்க முயற்சித்த நிர்வாகத்தின் நடவடிக்கையைத் தொழிலாளர்கள் முறியடித்தனர்.

''நான் இனி போராட்டங்களில் ஈடுபடமாட்டேன். ஒழுங்காகப் பணிபுரிகிறேன்'' என்ற அடிப்படையிலான ஒரு அடிமைச் சாசனத்தில் கையெழுத்து வாங்கிக் கொண்டே கிளையைச் சேர்ந்த ஊழியர்களும் தொழிலாளர்களும் அனுமதிக்கப்பட்டனர். கிளை ஊழியர்கள் பலருக்குத் தலைமை அலுவலக ஊழியர் அடையாள அட்டை கொடுத்து மோசடியும் செய்துள்ளது, நிர்வாகம். அடிமைச்சாசனத்தில் கையெழுத்திட்டுப் போனவர்களில் இருவருக்கு உடனடியாக பெங்களூருக்கு மாற்றல் உத்தரவும் கொடுத்தது. விசுவாசம் தொழிலாளர்களுக்கு மட்டும்தான்; எனக்கில்லை என்று நிரூபித்தது நிர்வாகம். கதவடைப்பு விலக்கிய கையோடு போராடிய முன்னணியாளர்கள், செய்தியாளருக்குப் பேட்டி கொடுத்த பெண்மணி, உடன் நின்ற பெண்மணி உட்பட 30 பேரைத் தற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளது நிர்வாகம்.

தாராளமயமாக்கல் கொள்கையின் ஓர் அங்கமான ''தங்க கை குலுக்கல்'' என்கிற விருப்பபூர்வ ஓய்வு முறையில் தேவையில்லாத தொழிலாளர்களை வீட்டுக்கனுப்ப தினமணி நிர்வாகம் முயற்சி எடுத்தது. நிர்வாகம் கொடுக்கும் அற்பத்தொகையைப் பெற்று வேலையை விட யாரும் முன்வரவில்லை. இதேபோல் சென்னை கிளைத் தொழிலாளர்கள், ஊழியர்கள் பலரை திருவனந்தபுரம் போன்ற தனது புதிய கிளைகளுக்கு மாற்றம் செய்ய முனைந்ததும் தொழிலாளர்களால் முறியடிக்கப்பட்டது. இதனால் கதவடைப்பை நீக்கக் கோரிய தொழிற்சங்கத்திடம், யாரையும் வீட்டுக்கனுப்பும், மாற்றல் செய்யும் தனது முடிவில் தலையிடக்கூடாது என்ற உத்தரவாதத்தைக் கேட்டார்கள், நிர்வாகத்தினர். இதை ஏற்க மறுத்த தொழிற்சங்க முன்னோடிகளை வெளியே நிறுத்தியுள்ளனர்.

சி.ஐ.டி.யு.வைச் சேர்ந்த டபிள்யூ. ஆர். வரதராஜன் தலைமையில் - வழிகாட்டுதலில் செயல்படும் தினமணி தொழிற்சங்கப் பொறுப்பாளர்களிடம் உள்ள உதிரி பாட்டாளி வர்க்கத் தன்மை காரணமாகப் போராடிய சக தொழிலாளர்களை உறுதியுடன் தொடர்ந்து நிலைநிறுத்தவும் நிர்வாகத்தின் சதிகளை முறியடிக்கவும் முடியவில்லை. மேலும் போராட்டத்தின் நியாயத்தை பிற பத்திரிகை நிறுவனத் தொழிலாளர்களிடமும் மக்களிடமும் எடுத்துச் சென்று ஆதரவு திரட்டாமல் தமக்குள் முடக்கிக் கொண்டதும் இவர்களின் போராட்டத் தோல்விக்கு ஒரு காரணம்.

தினமணி தொழிலாளர்களின் போராட்டத்தைப் பற்றிய செய்திகளைப் பிற பத்திரிகை நிறுவன முதலாளிகள் வர்க்க பாசத்தோடு இருட்டடிப்பு செய்தனர். இந்நிறுவனங்களிலுள்ள பத்திரிகையாளர்களோ முதலாளிகளுக்கு விசுவாசமாகத் தமது வாயை இழுத்துப் பூட்டிக் கொண்டனர். இத்தனைக்கும் செய்தியாளர்கள், துணை ஆசிரியர்கள் போன்றவர்கள் தனியே சில சங்கங்களைக் கொண்டிருந்தும் இவ்விசயத்தில் பாராமுகமாகவே இருந்தனர். பத்திரிகை நிறுவனங்களில் உள்ள உடலுழைப்புத் தொழிலாளர் பிரிவினருக்கோ தனித்தனியான சங்கம் இருக்கிறதே ஒழிய ஒருங்கிணைந்த ஒரு சரியான தொழிற்சங்கம் இல்லை. தினமணி நிர்வாக கிளைத் தொழிலாளர்களுக்குள்ளும் ஒருங்கிணைப்பு இல்லை. இந்நிலை மாறாத வரை பத்திரிகை முதலாளிகளின் கைமேலோங்கியிருக்கவும் தொழிலாளர்கள் ஒடுக்கப்படுவதும் தொடரவே செய்யும்.



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 10

இதழ்: 22-24

16 அக். - 15 நவம். '95

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.50
ஆண்டு சந்தா: ரூ. 84.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 18

அட்டை ஓவியம்: கரோ



படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்
இரா. சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
25, அருணாசலம் தெரு,
ஜோதிராமலிங்க நகர்,
ஜாபர்கான் பேட்டை,
சென்னை - 600 083.


## உ.பி.: தலித்துகளின் பெயரால் நடந்த மோசடி

**நா**ட்டிலேயே மிகப் பெரிய மாநிலமான உத்திரப் பிரதேசத்தில் முதல் முறையாக அமைந்த ''தலித்து'' அதுவும் ''தலித்துப் பெண்'' தலைமையிலான அமைச்சரவை நாலரை மாதங்களில் கவிழ்க்கப்பட்டு விட்டது. இந்த ஆட்சி இவ்வளவு காலம் நீடித்திருந்ததுதான் வியப்புக்குரியதே தவிர, இது கவிழ்ந்து போனதல்ல. எலிக்கும் பூனைக்கும் ஏற்பட்ட கலியாண உறவு எவ்வளவு காலம் நீடிக்கும்? ஒன்றை எதிர்ப்பதிலும், அழிப்பதிலும்தான் மற்றதன் வளர்ச்சியும் நீடிப்பும் இருக்கிறது என்கிற கொள்கையும் கோட்பாடும் பேசி வந்த இரண்டு கட்சிகளின் சந்தர்ப்பவாதக் கூட்டில் உருவாகியிருந்தது அந்த அரசு. உ.பி. சட்டப்பேரவையில் பத்தில் ஒரு பங்கே பலம் பெற்றிருந்த தலித்துகள் - ஒடுக்கப்பட்ட மக்களின் கட்சி என்று சொல்லிக் கொள்ளும் பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் கன்சிராமின் சகபாடி மாயாவதி ஆட்சிக்கு முட்டுக் கொடுத்திருந்த இந்து மதவெறி பாசிச பாரதீய ஜனதா, தனக்கு அவசியமான எந்தச் சமயத்திலும் கவிழ்த்து விடும் என்பது எல்லோரும் எதிர்பார்த்ததுதான்.

இரண்டு கட்சிகளுக்கும் இடையில் அரசியல் விபச்சார ஒப்பந்தம் உருவான போதும் சரி, அதை முறித்துக் கொண்ட போதும் சரி அவை சொன்ன காரணங்கள் வெறும் சந்தர்ப்பவாதப் பித்தலாட்டம்தான். எழுபதுகளின் இறுதியில் மொரார்ஜி தலைமையிலான ஜனதா கட்சி ஆட்சியைக் கவிழ்த்து சிறுபான்மையான சரண்சிங் ஆட்சியை ஏற்படுத்தி, மீண்டும் அதையே கவிழ்த்து அடுத்து வந்த தேர்தலில் ஆட்சியைப் பிடித்தார் இந்திரா. எண்பதுகளின் இறுதியில் வி.பி. சிங் தலைமையிலான ஜனதா தள தேசிய முன்னணி ஆட்சியைக் கவிழ்த்து சிறுபான்மையான சந்திரசேகரின் ஆட்சியை ஏற்படுத்தி, மீண்டும் அதையே கவிழ்த்து அடுத்து வந்த தேர்தலில் ஆட்சியைப் பிடிக்க ஏத்தணித்தார் ராஜீவ் காந்தி. அதற்குள் அவரது சதிகாரச் செயல்களுக்கு அவர் பலியானதைக் கொண்டு காங்கிரசு ஆட்சியைப் பிடித்தது. இதே செயல்தந்திரத்தைத்தான் உ.பி. விவகாரத்தில் பாரதீய ஜனதா கட்சி கடைப்பிடித்தது. ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதா கும்பலின் இந்து மதவெறி பார்ப்பனீய சாதிவெறிக்கு எதிரானது என்று சொல்லிக் கொண்டு ஆட்சிக்கு வந்திருந்தது முலயம் சிங் தலைமையிலான சமாஜ்வாதிக் கட்சி - பகுஜன் சமாஜ் கட்சி கூட்டாட்சி. அக்கூட்டை முறித்து ஆட்சியைக் கவிழ்த்து, அடுத்து வரும் தேர்தலில் மீண்டும் ஆட்சியைப் பிடிக்கும் செயல்தந்திர நோக்கத்தோடுதான் சிறுபான்மையான மாயாவதி ஆட்சிக்கு பாரதீய ஜனதா முட்டுக் கொடுத்து வந்தது. முலயம் சிங் யாதவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டதோடு அதன் நோக்கம் நிறைவேறி விட்டது. தலித்துப் பெண் முதல்வராக உதவி, அம்மக்கள் ஆதரவையும் பெற எண்ணியதாகச் சொல்வதெல்லாம் வெறும் பேச்சுதான். ஏதாவது காரணத்தைச் சொல்லி இந்த ஆட்சியையும் கவிழ்ப்பதற்காகவே பாரதீய ஜனதா காத்திருந்தது. லஞ்ச - ஊழல், கிரிமினல்களின் ஆதிக்கம், சட்டம் ஒழுங்கு சீர்குலைவு, நிர்வாகம் செயலிழந்த நிலை, காந்தி, இராமபிரான் மீதான அசிங்கமான பிரச்சாரம் ஆகிய காரணங்களுக்காகத்தான் மாயாவதி அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொண்டதாக இப்போது கூறுகிறது. கடைசி ஒரு காரணத்தைத் தவிர மற்றவை ஏற்கனவே இருந்த முலயம் சிங் ஆட்சியைக் கவிழ்த்ததற்குச் சொன்னவைதாம்.

தனது கட்சியைப் பிளந்து எம்.எல்.ஏக்களுக்கு விலைபேசி இழுத்தும், பஞ்சாயத்து, இடைத்தேர்தல்களில் சதிவேலைகள் செய்தும், இதற்காக கிரிமினல் கும்பல்களைப் பயன்படுத்துவதாகவும் எனவேதான் கூட்டணியை முறித்துக்கொண்டு முலயம் சிங் அரசைக் கவிழ்த்ததாகவும் மாயாவதி - கன்சிராம் அப்போது காரணம் கூறினர். கிரிமினல் ஆதிக்கத்தை ஒழித்து சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதில் பாரதீய ஜனதாவுடன் உடன்படுவதால், அதன் ஆதரவுடன் ஆட்சி அமைத்ததாக நியாயப்படுத்தியது. கொள்கை - கோட்பாடுகளில் சமரசம் செய்து கொள்ள மாட்டோம் என்று வாக்களித்தது. இப்படிச் சமரசம் செய்து கொள்ளாததாலும், சட்டமேலவைப் பதவிகள் தராததாலும் தமது ஆட்சியைப் பாரதீய ஜனதா கவிழ்த்து விட்டதாக இப்போது கூறுகிறது. ஆனால், பதவிக்கு வந்ததும் காந்தி எதிர்ப்பு முதலியவற்றில் பச்சோந்தித்தனமாகப் பேசியும் நடந்தும் வந்தனர்.

காசி, மதுராவில் இன்னுமொரு அயோத்தியை உருவாக்கும் முயற்சியில் ஆர்.எஸ்.எஸ். கும்பல் இறங்கியபோது கூடுமானவரை மிதவாதப் போக்கைப் பின்பற்றினர். முலயம் ஆதரவு கிரிமினல்களை ஒடுக்கி, அதிகாரிகளை மாற்றினாலும், இந்தப் புதுக் கூட்டுக்கு ஆதரவான கிரிமினல்கள் - அதிகாரிகள் ஆதிக்கத்துக்கும் பதவிக்கும் வரும்படி ஏற்பாடு செய்தனர். பாரதீய ஜனதாவின் தயவில் ஆட்சிக்கு வந்த மாயாவதி - கன்சிராம் இணை, அக்கட்சி விருப்பப்படி விரட்டப்பட்டதே தவிர இதன் முடிவென்று எதுவும் இல்லை. முதலில் பாரதீய ஜனதா, முலயம் இரு தரப்புமே சட்டமன்றத்தைக் கலைக்கக் கோரினர்; ஆனால் அது தொங்கு நிலையில் வைக்கப்பட்டுள்ளதால், தமக்கே ஆட்சி அமைக்கும் உரிமை கோரி, பலம் திரட்டுவதற்காகப் பகுஜன் சமாஜ் கட்சி எம்.எல்.ஏ.க்களுக்கு விலை பேசுகின்றனர். எப்படியாயினும் நடந்து முடிந்த உ.பி. அரசியல் விபச்சாரக் கூத்துக்கள், ''தலித் - பிற்பட்டோரது'' இலட்சியக் கூட்டு பற்றிக் கனவு காண்பவர்களும் சரி, தேர்தல் கூட்டுகளை அமைப்பவர்களும் சரி அம்மக்களின் பெயரால் மோசடி, பித்தலாட்டம் செய்பவர்கள் தாம் என்பது நிரூபணமாகிவிட்டது.

படிப்பகம்

www.padippakam.com

# பஞ்சாயத்து ஆட்சி ரவுடியாட்சியாகும்

கிரிமினல்கள் - ரவுடிகள் - திடீர் பணக்காரர்கள் - பிழைப்புவாதிகளை முன்னிறுத்துகிற ஓட்டுக்கட்சிகள் பொதுத்தேர்தலுக்கு முன்பாகத் தமக்குள் மோதி பலத்தைச் சோதித்துக் கொள்ள நாள் குறித்தாகி விட்டது. அதாவது பாசிச ஜெயா கும்பல் தனது ஆட்சிக்கு ஏற்பட்ட நெருக்கடி காரணமாக வேண்டா வெறுப்போடு உள்ளூராட்சி தேர்தல் நடத்துவதற்கான தேதிகளை அறிவித்துள்ளது. பீகாரில் எதிர்க்கட்சியான ஜனதாதளத்திற்கும் தமிழ்நாட்டில் தேர்தல் கூட்டு உடன்படிக்கை நோக்கில் ஜெயா கும்பலுக்கும் நெருக்கடி கொடுக்கும் பொருட்டு ''டிசம்பர் மாதத்திற்குள் உள்ளூராட்சி தேர்தல்களை நடத்தாத மாநிலங்கள் பற்றி பரிசீலிக்கப்படும்'' என மத்திய அரசு எச்சரித்தது. இதுவல்லாமல் தமிழக எதிர்க்கட்சியினரும் உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்படாததைக் கண்டித்து ஜெயாவுக்கு எதிரான அம்புகளில் ஒன்றாகப் பயன்படுத்தி வந்தனர். ஒரு வழியாக ஜெயா கும்பல் உள்ளூராட்சி தேர்தல் தேதிகளை அறிவித்திருந்தாலும் தேர்தல் நடக்குமா என்ற கேள்வி எல்லோரிடமும் தொக்கி நிற்கிறது.

குறுகிய காலத்தில் பொதுத்தேர்தல் எதிர்வரும் நேரத்தில் வீணாக உள்ளூராட்சி தேர்தல்களில் பணத்தைக் கொட்டியழிக்க ஜெயா கும்பல் விரும்பவில்லை. மேலும் நான்காண்டு கால ஆட்சியின் ஊழல், ஆடம்பர, அராஜக நடவடிக்கைகளால் மக்கள் மத்தியிலிருந்து தனிமைப்பட்டு தோல்வி பயம் கவ்வி நிற்கிறது. இதனால் நகராட்சி தேர்தல்களை நடத்தாமல் ஊராட்சி தேர்தல்களை மட்டும் நடத்துவதோடு ஊராட்சி தேர்தலுக்கான வார்டுகள் பிரிப்பிலும் மோசடிகள் செய்து வருகிறது, ஜெயா கும்பல். உள்ளூராட்சி தொடர்பான புதிய சட்டத் திருத்தத்தின்படி பெண்கள், தாழ்த்தப்பட்டவர்களுக்கென குறிப்பிட்ட அளவிற்கு வார்டுகளை ஒதுக்க வேண்டும். இவ்வாறு ஒதுக்குவதில் முறைகேடாகத் தமக்குச் செல்வாக்கு இல்லாத பகுதிகளையெல்லாம் பெண்கள் மற்றும் தாழ்த்தப்பட்டவர்கள் வார்டாகப் பிரித்து வருவதை எதிர்க்கட்சிகள் கண்டித்துள்ளன. நகராட்சிகளுக்கு தேர்தல் நடத்தாதற்கு எதிராக அனைத்துக் கட்சியினரும் போராட்டமும் நடத்தி உள்ளனர்.

ஆனால் எந்தக் கட்சியினரும் இவற்றிற்கு எதிராக நீதிமன்றம் சென்று தேர்தலுக்குத் தடைவாங்கவில்லை. ஜெயா கும்பலுக்கு எதிராக மக்களிடையே உள்ள வெறுப்பைப் பயன்படுத்தி வெற்றிபெற முடியுமா என்பதைப் பொதுத் தேர்தலுக்கு முன்பாக இந்த உள்ளூராட்சி தேர்தல் மூலமாகச் சோதித்துப் பார்த்துக் கொள்ள எதிர்க்கட்சிகள் விரும்புகின்றன. எலியும் பூனையுமாக இருந்தவர்கள் எல்லாம் வெட்கமின்றி புது வியாக்கியானம் கொடுத்து சந்தர்ப்பவாத கூட்டணிகளும் கட்டியுள்ளார்கள். தி.மு.க., பா.ம.க., வாழப்பாடி காங்கிரசு முதலான ஏழு கட்சிக் கூட்டணியிலும் சரி, மூப்பனார் காங்கிரசு தலைமையிலான திருநாவுக்கரசு, பண்ருட்டி இராமச்சந்திரன் முதலானவர்கள் எல்லாம் இணைந்த 9 கட்சிக் கூட்டணியிலும் சரி, ம.தி.மு.க., 'மார்க்சிஸ்டு'களின் கூட்டணியிலும் சரி பிழைப்பு வாதமே மேலோங்கி நிற்கிறது. (ஒருவேளை) தேர்தல் நடந்து, வரும் வெற்றி தோல்வி முடிவுகளைப் பொருத்து இந்த அணிசேர்க்கையில் மாற்றம் நிகழும் என்பதை ''இது உள்ளூராட்சி தேர்தலுக்காகக் கட்டப்பட்ட கூட்டணி தான்'' என்று நாசூக்காவும் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த திராவிடக் கட்சிகள், போலி கம்யூனிஸ்டுகளில் இருந்து ஜெயா கும்பல் வரை எல்லோரும் காங்கிரசு கும்பல் உள்ளூராட்சி தேர்தல் பற்றி பரப்பும் மாயைகளில் உடன்படுகிறார்கள். உள்ளூராட்சி தொடர்பாக காங்கிரசு கும்பல் செய்த 73 வது அரசியல் சட்ட திருத்தத்தில் சில விசயங்களில் எதிர்க்கட்சியினர் மாறுபட்ட கருத்து தெரிவித்தாலும் ஊராட்சி, நகராட்சி தேர்தல்கள் அடிப்படை மக்களுக்கு் நேரடி அதிகாரத்தைக் கொடுக்கின்றன என்று எல்லோரும் இணைந்தே கூப்பாடு போடுகிறார்கள்.

இந்திய உழைக்கும் மக்களைச் சுரண்டவும், ஒடுக்கவும் வசதியாக, மன்னர் காலத்து குடவோலை முறை, கிராமப் பஞ்சாயத்துக்களிடமிருந்த பொருளாதார நீதி, நிர்வாகங்களைப் பறித்துத் தமக்கிசைவான உள்ளூர் நிலப்பிரபுக்கள், ஜமீன்தார்கள், மிட்டா மிராசுகள், தரகு முதலாளிகள் கையில் கொடுப்பதற்காக ஆங்கிலேய ஆட்சியாளர்களால் திணிக்கப்பட்டதுதான் பஞ்சாயத்து உள்ளூராட்சி அமைப்பு முறை. இன்று நாம் காணும் நாடாளுமன்ற சட்டமன்ற அராஜகம், ஆபாசம், ரௌடித்தனம் முதலிய அனைத்துக்குமான அறிமுக மேடையாக விளங்கியவை உள்ளூராட்சி அமைப்புகள்தான்.

உள்ளூர் நில - பண முதலைகள், சாதிய ஆதிக்க சக்திகள், மக்கள் விரோத சக்திகள் உள்ளூராட்சி பதவிகள் மூலம் மேலும் உழைக்கும் மக்களை ஏய்த்துப் பிழைப்பதுதான் இதுவரை நடந்துள்ளது. விதிவிலக்காகப் பதவிக்கு வந்த ஒருசில சீர்திருத்த - ஜனநாயகவாதிகள், சமூக சேவையாளர்கள் மக்களுக்கு எதுவும் செய்ய முடியாமல் கரைந்து உருமாறியது தான் நடந்துள்ளது. ஏனெனில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களைப் போலவே இவர்களுக்கு மிகக் குறைந்த - வரம்புக்குட்பட்ட அதிகாரங்கள் தான் உள்ளன. அதாவது அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கும் அதிகாரம் மட்டுமே உள்ளது. அதை முடிவெடுத்து நடைமுறைப்படுத்தும் அதிகாரமோ கிராம, மண்டல, ஒன்றிய, நகர, மாவட்ட அதிகாரிகளிடம் உள்ளது.

இந்த பஞ்சாயத்து - உள்ளூராட்சி அமைப்பு முறைகளில் மேலும் மேலும் தமது ஆதிக்கத்தைச் செலுத்துவதற்குத் தான், அவற்றை முழுமையாகத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்குத்தான் நேரு, இந்திரா, ராஜீவ், நரசிம்மராவ் வரையிலான காங்கிரசு கும்பல் பாடுபடுகிறது. காந்தியின் 'கிராம சுயராஜ்ஜிய' கனவுப்படி ''அதிகாரங்களை கிராமங்களுக்குப் பகிர்ந்தளிக்கிறோம்; பரவலாக்குகிறோம். மக்களே நேரடியாகத் தம்மை நிர்வகித்துக் கொள்ளும் கீழ்மட்ட ஜனநாயக அமைப்புகளை உருவாக்கி சமூகப் புரட்சிக்கு வித்திடுகிறோம்'' என்ற சவடால்களை மேற்கண்ட காங்கிரசு பாசிஸ்டுகள் தமது ஆட்சிக்கு ஆபத்து நெருக்கடி வரும்போதெல்லாம் கையிலெடுக்கத் தவறியது இல்லை.

1957-ல் பல்வந் ராய் மேத்தா ஆய்வுக் குழு அமைத்தும் 1973-ல் அசோக் மேத்தா ஆய்வுக்குழு அமைத்தும் ஆலோசனைகள் பெற்று 'பஞ்சாயத்து ராஜ்ஜியத்தை'த் தூக்கி நிறுத்தி விடுவதாக ஏய்த்தது, காங். கும்பல். இக்குழுக்களின் சில ஆலோசனைகள்படி மூன்றடுக்கு அமைப்பு. நான்கு பேர் நேரடித் தேர்வு என்கிற உள்ளூராட்சி முறையைப் பல மாநிலங்களில் அமுல்படுத்தவும் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளவும் முயன்றது ராஜீவ் கும்பல். ராவ் ஆட்சியில் சட்டத்திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்திருத்தத்தின் மூலம் ஏற்கனவே உள்ளூராட்சித் தேர்தல்கள், அமைப்பு முறைகள் தொடர்பாக மாநிலங்களுக்கு இருந்த அதிகாரத்தைப் பறித்து மத்தியில் குவித்துக் கொண்டது; தேர்தலை நடத்துகிற, அவற்றிற்காக நிதி



படிப்பகம்

www.padippakam.com

ஒதுக்குகிற அதிகாரம் மட்டுமே மாநிலங்களுக்கு விட்டு வைத்துள்ளது.

சில மாற்றங்கள் புதிய சட்டத்திருத்தத்தில் இருந்தாலும், அதிகாரிகளுக்கு உள்ள அதிகாரங்களும் பிரதிநிதிகளுக்கு உள்ள வரம்புக்குட்பட்ட அதிகாரங்களும் அப்படியே தொடர்கின்றன. எனவே, ஏற்கனவே பல மாநிலங்கள் தேர்தலே நடத்தாமல் அதிகாரிகளைக் கொண்டே ஆட்சி செய்த நிலைநீடிக்கலாம். மேலும் உள்ளூராட்சிகளுக்கு நிதி ஒதுக்கும் அதிகாரம் மத்திய, மாநில அரசாங்கத்தின் கைகளில் இருப்பதால் முன்பு போலவே ஒதுக்க வேண்டிய அடிப்படை தேவைப் பணிகளுக்கான நிதியை ஒதுக்காமல் புறந்தள்ளுவதும் தொடரவே செய்யும். மேலும் மத்திய, மாநில அரசுகள் தமது சுயநல மோதல்களில் ஒருவரை ஒருவர் தாக்க, நெருக்கடி கொடுக்க பயன்படுத்துவதற்குரிய பழைய விதிமுறைகளும் அப்படியே உள்ளன. ஜெயா கும்பல் தேர்தலை நடத்தாமல் நிறுத்துவதற்குரிய சட்ட சந்து பொந்துகளைத் தேடியும் வருகிறது.

உண்மையில் மக்களுக்கு எதிரான முறையில்தான் சில திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள். சமூகப் பிரச்சினைகளில் 'நீதி'யும், சமூக சேவைப் 'பணி'களில் நிதி நிர்வாகத்தையும் ஒருங்கே செய்து வந்த 'குடவோலை கிராம பஞ்சாயத்து முறை'களை அழித்து, இரண்டையும் பிரித்து நிதி - நிர்வாகப் பணிகளை மட்டுமே கொண்டதுதான் ஆங்கிலேயனின் பஞ்சாயத்து அமைப்பு முறை. இதில், அதாவது காங்கிரசு கும்பல் கடைபிடித்துவந்த பழைய பஞ்சாயத்து அமைப்பு முறை விதிகளில் பின்தங்கிய மலைவாழ்ப் பகுதி மக்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டது போன்ற சில முறைகள் இருந்தன.

ஆனால் 73-வது சட்டத்திருத்தப்படி எல்லாப்பகுதிகளையும் உள்ளடக்கி நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். இதற்கு எதிராக ஆந்திரா உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றும் நடந்து வருகிறது. மலைவாழ் மக்களிடத்திலும் இப்புதிய பஞ்சாயத்துமுறை திணிக்கப்படுவதால் குழுக்குழுவாக வாழும் அவர்களது வாழ்க்கை முறையில் முறைகுலைவு ஏற்படுகிறது. முறையற்ற பிளவுகளும், இணைப்புகளும் நிகழ்வதால் குழுமுறை பாதிக்கப்பட்டு பல மோதல்களும் சமூகப் பிரச்சினைகளும் எழுகின்றன. இதுவல்லாமல் முறையற்ற தொகுதி பிரிப்பால் மலைவாழ் மக்கள் அல்லாத வெளிநபர் உள்ளூராட்சிப் பதவிகளைக் கைப்பற்றி அம்மக்களைச் சுரண்டவும் ஆதிக்கம் செய்யவும் வழிவகுக்கின்றன.

இதேபோல் தாழ்த்தப்பட்டவர்கள், பெண்களுக்கான இட ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தாலும் அவர்களை ஒப்புக்கு முன் வைத்துக் கொண்டு சாதிய - நிலப்பிரபுத்துவ ஆதிக்க சக்திகள் அவர்கள் மீது மேலும் தமது பிடியை இறுக்கிக் கொள்கின்றனர். மேற்கு வங்கத்தில், மஹாராஷ்டிராவில், குஜராத்தில் உள்ள பல பெண் உறுப்பினர்கள் ஊராட்சி, ஒன்றியக் கூட்டங்களில் கலந்து கொள்வதில்லை; அவர்களுக்குப் பதிலாக அவர்களை முன்னிறுத்திய குடும்ப ஆண்கள் கலந்து கொள்வதும் நடக்கிறது.

''எமது கிராமங்களில் நடக்கும் ஆணாதிக்க சாதியக் கொடுமைகளுக்கு எதிராக இப்பதவியைக் கொண்டு எதுவும் செய்ய முடியவில்லை; ஏனெனில் பொருளாதார ரீதியாக பகுதியில் ஆதிக்கம் செய்யும் அவர்கள் பாமரர்களையும், பெண்களையும் கட்டுப்படுத்தி எங்களுக்கு எதிராகவே நிறுத்துகிறார்கள்''




என்று பேட்டியளிக்கிறார்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட சீர்திருத்த சிந்தனையுள்ள பெண்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட ஊராட்சி மன்ற உறுப்பினர்கள். மேலும் கிராம பஞ்சாயத்து ஒன்றியக் கூட்டங்களில் பெரும்பான்மையாக உள்ளவர்கள் ரவுடித்தனம், கூச்சல், குழப்பங்களைச் செய்து எங்களைப் பேசவே அனுமதிப்பதில்லை என்றும் நொந்து கொள்கிறார்கள்.

அரசியல் கிரிமினல்மயமாகி, நகரங்கள் முதல் குக்கிராமங்கள் வரை கோலோச்சுகிற நிலையில், இதற்கு இந்த சட்டமும் அமைப்பு முறையும் பாதுகாவலனாக இருக்கும் நிலையில் சீர்திருத்தங்களால் எதுவும் மாறிவிடாது என்பது காங்கிரசு கும்பல் கொண்டு வந்த ''பஞ்சாயத்துராஜ்'' மாய்மாலத் திட்டத்தின் மூலமும் நிரூபணமாகிவிட்டது. பஞ்சாயத்து ராஜ் சட்டத்திருத்தம் நடைமுறையில் குறுகிய காலத்திலேயே தோல்வியைச் சந்தித்துவிட்டது. எனினும் மீண்டும் மீண்டும் அதை முன்னிறுத்தி ஜனநாயக கூச்சலிடுகிறார்கள்.

தமிழகத்தில் உள்ளூராட்சி தேர்தல் நடக்குமானால் அது பஞ்சாயத்து ராஜ் தொடர்பான ஜனநாயக வேடத்தை நன்கு தோலுரித்துக் காட்டி விடும். இதை ஜெயா கும்பல் முன்னின்று நடத்தும். தமிழக அரசியலில் ஏராளமான கிரிமினல்களைப் புகுத்தி சாதனைபடைத்தவர், பாசிச ஜெயா. தம்து கட்சியிலுள்ள கிரிமினல் மாஃபியாக்கள், ரவுடிகளின் படைபலத்தை நம்பித்தான் உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கு தயாரிப்பு செய்கிறார் ஜெயா. சட்டமன்ற, நாடாளுமன்ற பதவிகளுக்கு எப்படி கிரிமினல்களையும், திடீர் பணக்கார ஆதிக்க கும்பலையும் பொறுக்கியெடுத்தாரோ அதேபோல்தான் உள்ளூராட்சி பதவிகளுக்கும் பொறுக்கியெடுத்து நிறுத்துவார்.' உள்ளூர் ரவுடிகள், சாதி - பொருளாதார ஆதிக்க சக்திகள் கட்சி சார்பற்றும் சுயேட்சையாகவும் நின்று வெற்றி பெறுவதும் இவர்களை அனைத்துக் கட்சியினரும் விலை பேசி திரட்டி வைத்துக் கொள்வதும் நடக்கும்.

கிராமங்களில் உள்ள ரௌடிக் கும்பல்கள், சமூக விரோதிகள், சாதி ஆதிக்க பணக்கார கும்பல்கள், அனைத்துக் கட்சி சார்பாக நின்று கட்டவிழ்த்து விடும் அராஜக, கிரிமினல், தில்லுமுல்லு நடவடிக்கைகள்தான் இந்த உள்ளூராட்சி தேர்தலில் ஆக்கிரமித்திருக்கும். பொதுத்தேர்தலுக்கான ஒத்திகைக் களமாக இத்தேர்தல் இருப்பதால், கிரிமினல்களால் வெறியோடு வழி நடத்தப்படும். தேர்தலுக்கு முன்பாகவே ஈரோடு, வில்லரசம்பட்டி பஞ்சாயத்துத் தலைவர் பதவிக்கு போட்டியிடுவதில் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்களுக்குள் நடந்த மோதலில் ஒரு கொலையும் விழுந்துவிட்டது.

ஜெயா கும்பலின் கிரிமினல் அரசியலை முறியடிக்கும் தகுதியும், திராணியும் எதிர்க்கட்சிகளுக்கு இல்லை. இனி கவர்ச்சி முழக்கங்கள், கொள்கை சவடால்கள், சலுகைகள், வாக்குறுதிகள் என எதுவும் எடுபடாது என்பதைப் புரிந்து கொண்டு கிரிமினல்களைத் தாமும் முண்டாதட்டிக் களத்தில் இறக்கிவிடத் தயாராகியும் வருகிறார்கள். எனவே இத்தேர்தலில் முன்னெப்போதும் நடந்திராத அளவிற்கு முறைகேடுகள், அராஜகங்கள், தில்லுமுல்லுகள், கிரிமினல் செயல்கள் நடக்கும் என்பது மட்டும் உறுதி.

● ராசு.



படிப்பகம்

www.padippakam.com

# வசதி சிறிது வந்தாலும் வாழும் உரிமை இல்லை

பார்ப்பன ஜெயா மற்றும் ''தேவர்'' சசிகலா உதவியுடன் போலீசு பட்டாளம், அழகு செக்யூரிட்டி நிறுவன குண்டர்கள் கொடியன்குளம் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது நடத்திய திட்டமிட்ட கொலை வெறித் தாக்குதலும் துப்பாக்கிச்சூடும் வெளிச்சத்திற்கு வந்து இந்த ஆட்சியின் கோரத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

அண்மையில் நடந்த தென்மாவட்ட சாதிக் கலவரங்களைத் தொடர்ந்து சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவர் பன்னீர் செல்வம் தலைமையில் போலீசு கும்பல் மேல்சாதி வெறியோடு கொடியன்குளம் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்பில் புகுந்து காட்டுமிராண்டித்தனமாக தாக்கியது. இதைக் கண்டித்து பல கண்டனக் குரல்களும் போராட்டங்களும் எழுந்தன. பன்னீர் செல்வம், சசிகலா - நடராஜனின் உறவினர் என்பதால் இவரை குற்றச்சாட்டுகளிலிருந்து காப்பாற்றும் வேலையும் அரசு தரப்பில் நடந்தது.

தேவேந்திர குல வேளாளர் கூட்டமைப்புக்குத் தலைமை தாங்கும் டாக்டர் கிருஷ்ணசாமியும் பிற முன்னணியாளர்களும் சசிகலா - பன்னீர் செல்வம் கும்பலின் அயோக்கிய செயல்களை அம்பலப் படுத்திக் கண்டித்து வந்தனர். தமிழகம் தழுவிய அளவில் பல்லாயிரக்கணக்கானவர்களைத் திரட்டி 6-10-95 அன்று கண்டன ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடத்த திட்டமிட்டதோடு இதிலும் மையமாக பன்னீர் செல்வம் மீது நடவடிக்கை கோரி முழக்கமிட்டனர். இதனால் ஆத்திரமடைந்த சசிகலா கும்பல் சென்னையில் நடத்தப்பட்ட இந்த ஊர்வலத்தின் மீது போலீசு மற்றும் தனக்கு வேண்டப்பட்ட அழகு செக்யூரிட்டி சர்வீஸைச் சேர்ந்த குண்டர்களை ஏவி திடீர் தாக்குதல் தொடுத்தது. சிதறி ஓடிய தாழ்த்தப்பட்ட மக்கள் மீது போலீசு கும்பலும் திட்டமிட்டபடி துப்பாக்கிச் சூடு நடத்தி இருவர் உயிரைக் குடித்தது.

மீனவர் குப்பத்தைச் சேர்ந்த ஒருவர் மீது ஊர்வல வாகனம் ஏறிய தால் வதந்தி பரவி மீனவர்கள் மற்றும் ஊர்வல மக்களுக்கும் இடையில் நடந்த மோதல் - கலவரம் என ஜெயா கும்பல் இதைச் சித்தரித்தது. தொடர்ந்து, கத்திக்குத்தால்தான் இருவர் இறந்தனர் என மருத்துவமனையில் போலியான ஆவணமும் தயாரித்தது. துப்பாக்கி குண்டுகள் பாய்ந்து இறந்ததாக உண்மை அறிக்கை பெறவும் பாதிக்கப்பட்ட திரிசூலம் பகுதி தாழ்த்தப்பட்ட மக்கள் மருத்துவமனை முன் போராட்டம் நடத்தினர். இதற்குப்பின் பரவலாக எழுந்த கண்டன குரலுக்குப் பின், ஜெயா விசாரணைக்கு உத்தரவிட்டும் நிவாரண உதவி செய்தும் நாடகமாடினார். ஆனால் தாழ்த்தப்பட்ட மக்கள் தலைவர்கள் விசாரணையை மத்திய புலனாய்வுத் துறைக்கு மாற்றக் கோரி தமிழகம் தழுவிய போராட்டம் நடத்தப் போவதாகவும் அறிவித்துள்ளனர்.

தாழ்த்தப்பட்டவர்கள் மீதான தாக்குதல்கள் முந்தைய ஆட்சிகளைக் காட்டிலும் ஜெயலலிதா ஆட்சியில்தான் அதிகம் நடந்துள்ளன. சாதி அரசியல் தமிழகத்தில் பல ஆண்டுகளாகச் செல்வாக்கு செலுத்துகிறது என்றாலும் ஜெயா அதைத் தனக்கே உரிய பாணியில் நபர்களைப் பொருக்கியெடுத்து ஊக்குவித்து வருகிறார். அதாவது அந்தந்த பகுதியிலுள்ள சாதிக்காரர்களிலேயே பொறுக்கி அரசியலுக்கு ஏற்ற ரவுடிகளையும், கொச்சையான பிழைப்புவாதிகளையுமே தேர்ந்தெடுத்துப் பல சலுகைகளைக் காட்டி வளர்த்துவிட்டுள்ளார். சாதிக்கொரு மாவட்டம், புதைந்து கிடக்கும் சாதியத் தலைவர்களுக்கெல்லாம் சிலை - மரியாதை - சாதி ஆதிக்கப் பிரிவினர்கள் கிராமங்கள் வரை இதனால் பலம் பெற்று வெறியோடு தாழ்த்தப்பட்டவர்கள் மீது பாய்வது அதிகரித்துள்ளது.

இதிலும் குறிப்பாக அண்மைக் காலங்களில் சாதி இந்துக்களில் இடைத்தட்டுப் பிரிவினரான அகமுடையார், மறவர், கள்ளர், நாடார், வன்னியர், கொங்கு வேளாளக் கவுண்டர் ஆகியோரின் சாதி ரீதியான செயல்கள் முன்னுக்கு வந்துள்ளன. இச்சாதியினர் தனித்தனியாக மாநாடுகள் நடத்தி இட ஒதுக்கீடு, சலுகைகள் கோருவதையும் பார்க்கிறோம். பார்ப்பனரல்லாத பிற்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீடு மூலம் இதுவரை குறிப்பிட்ட சில சாதியினரும் சிறு பிரிவினருமே அரசு சலுகையை அதிகம் கைப்பற்றி ஆதாயமடைந்துள்ளனர். இதனால் தாழ்த்தப்பட்டவர்களுக்குரியது போல் தமக்கும் தனி ஒதுக்கீடு வேண்டுமென இடைப்பட்ட சாதியினர் கேட்கத் தொடங்கினர். அதே சமயம் இந்த இடைத்தட்டு சாதித் தலைவர்கள் இட ஒதுக்கீடு மூலம் சற்று பயனடைந்துள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக பகைமையைத் தூண்டி விடுகிறார்கள்; சாதி வெறியர்களோ நேரடி தாக்குதல் தொடுத்து வருகிறார்கள்.

கொடியன்குளம் தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வி, பொருளாதார ரீதியாக சற்று வளர்ந்துள்ளதும், சமூக ரீதியாக பிறரைப் போல் வாழ முற்பட்டதுமே மேல்சாதி வெறியர்கள் தாக்கியதற்குரிய காரணம். பரவலாக தாழ்த்தப்பட்ட மக்களிடையே, கல்வி, விஞ்ஞானம், தகவல் தொடர்பு, அரசியல் - பொருளாதார காரணிகளால் வாழ் நிலையிலும் சிந்தனையிலும் மாற்றம் - முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. தமது அடிமைத் தொழில்களை, அடிமை வாழ்வை விட்டு மற்ற தொழில்களுக்கு மாறவும் மற்றவர்களைப் போல் சம சமூக அந்தஸ்தைக் கோரவும் செய்கிறார்கள். அதேசமயம், சாதி அமைப்பு முறைக்குப் பழகிப்போன ''சாதி இந்துக்கள்'', தமது சாதியின் மேல்நிலையை விட்டுக் கொடுக்கவும் தயாராக இல்லை. இந்த முரண்பாட்டைப் பயன்படுத்திக் கொண்டு சாதிவெறியர்களும், சாதித் தலைவர்களும், அரசியல்வாதிகளும் ஆதாயமடைகிறார்கள். அதிலும் சசிகலா - நடராஜன் கும்பல் பின்னே திரண்டுள்ள தேவர் சாதியினரில் ஒரு பிரிவு கழிசடை அரசியல்வாதிகள் - சாதியத் தலைவர்கள், அதிகார வர்க்க பலத்துடன் தாழ்த்தப்பட்டவர்களைத் தாக்கியதுதான் தென் மாவட்ட கலவரங்களில் நடந்தது.

மேல்சாதி வெறியர்கள் இத்தகைய அதிகார வர்க்க - ஆளும் கும்பல் உதவியுடன் தொடுக்கும் தாக்குதலிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்களைப் பாதுகாக்க அவர்களின் பிரதிநிதிகளால் முடியவில்லை. தாழ்த்தப்பட்ட சாதி சங்கத்

சென்னை துப்பாக்கிச் சூட்டில் பலியான தாழ்த்தப்பட்டவர்கள்.





படிப்பகம்

www.padippakam.com

# பறையடிக்க மறுத்ததற்காக சமூகப் புறக்கணிப்பு

பறையடிக்க மறுத்ததற்காக தஞ்சையருகே குருங்குளத்தில் கட்டைவிரலை வெட்டிய சாதிவெறிக் கொடுமை நிகழ்ந்து அதன் சுவடு மறைவதற்குள் இன்னொரு தாக்குதல் பசும்பொன் மாவட்டம் கட்டிக்குளம் கிராமத் தாழ்த்தப்பட்டவர்கள் மீது தொடுக்கப்பட்டுள்ளது. கட்டிக்குளத்தில் தாழ்த்தப்பட்ட 120 குடும்பங்களில் ஊர் சாமிக்கும் இறந்தவர்களுக்கும் கொட்டு கொட்டுகிற தொழில் செய்பவர்களும் உண்டு. 15 கி.மீ. தூரம் உள்ள மானாமதுரைக்கு சித்திரை திருவிழாவிற்கு கொட்டு கொட்ட இந்த ஆண்டு வரவில்லை என்ற காரணத்திற்காக மேல்சாதி வெறியர்கள் தாழ்த்தப்பட்ட குடும்பங்களை ஒதுக்கி வைத்து உள்ளனர். ஊரின் கௌரவம் பாதித்துவிட்டது என்று கூறி "கலை வளர்ச்சிக் கழகம்" என்ற பெயரில் ஒருங்கிணைந்துள்ள சாதிவெறியர்கள், உள்ளூரிலும் வெளியூரிலும் வசிக்கும் கொட்டு கொட்டுகிற பிரிவினரிடம் "இனி தொழில் செய்ய மறுக்க மாட்டேன்" எனக் கையொப்பம் இடும்படி நிர்பந்தித்துள்ளனர். இதற்கு அம்மக்கள் மறுத்ததன் காரணமாகவே ஊரைவிட்டு தள்ளி வைத்தனர்.

தாழ்த்தப்பட்ட மக்கள் இதனால் சாதி இந்துக்கள் (அகமுடையார்) வசிக்கும் பகுதியிலுள்ள பள்ளிக்கூடம், ரேசன் கடை, அஞ்சல் நிலையம், நூலகம், மருத்துமனைக்குச் செல்ல முடியாமல் அவதியுற்றனர். 5 மாத காலமாக இந்நிலை தொடர்ந்து. மாவட்ட ஆட்சித்தலைவர், போலீசு உயர் அதிகாரிகள், கல்வித்துறை அதிகாரி, தீண்டாமை ஒழிப்பு பிரிவு அதிகாரி என அனைவரிடமும் மனுக்கள் மூலமும் நேரிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் முறையிட்டனர். மிகவும் காலதாமதமாகவே நடவடிக்கை மேற்கொண்டனர். சிவகங்கை தீண்டாமை ஒழிப்பு பிரிவு ஆய்வாளர் மாயாண்டி பாரதி, 26-6-95 அன்று கலை வளர்ச்சிக் கழகத்தினரை அழைத்துப் பேசி, தாழ்த்தப்பட்ட மக்களை கொட்டு கொட்டும் தொழில் செய்யும்படி கட்டாயப்படுத்தக் கூடாது என்றும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ கொடுமைப்படுத்தக் கூடாது என்றும் எழுதி கையொப்பம் வாங்கினார்.

ஆனால் இதையும் மனதில் வைத்துக் கொண்டு தமது சாதிவெறித் தாக்குதலைத் தொடரவே செய்தனர். மேல்சாதியினரின் நிலங்களை பங்கிற்கும் ஒத்திக்கும் உழவு செய்து வந்த தாழ்த்தப்பட்டோரிமிருந்து பறிமுதல் செய்யப்பட்டன. தாழ்த்தப்பட்டவர்கள் நான்கு பேர் சொந்த நிலம் கொண்டு பயிர் செய்து வருவதற்கு அரசு ஆழ்குழாய் மோட்டார் மூலம் தண்ணீர் பாய்ந்து வருகிறது. அது தடுத்து நிறுத்தப்பட்டது. ரவுடிகளைக் கொண்டு தாழ்த்தப்பட்டவர்களை மிரட்டுவது, அடிப்பது போன்ற சம்பவங்கள் நடந்து மானாமதுரை போலீசு நிலையத்தில் புகாரும் கொடுக்கப்பட்டது. இங்குள்ள சார்பு ஆய்வாளர் முத்துசாமியோ, புகார் கொடுக்க வந்த தாழ்த்தப்பட்டவர்கள் மீது 107-வது பிரிவின் கீழ் வழக்கு போடுவேன் என மிரட்டியுள்ளார். கட்டிக்குளத்தினர் தங்கள் பிரச்சினைகளை ஊர்பஞ்சாயத்தில்தான் தீர்த்துக் கொள்வது வழக்கம். பஞ்சாயத்து தலைவர் மேல்சாதிக்காரர்களுக்கு சாதகமாக இருப்பதாலும், இங்கு தாழ்த்தப்பட்டவர்களுக்கு கோயில் முன்னே கொளுத்தும் வெயிலில் நிற்கவைத்து அபராதம் கட்டச் சொல்கிற தண்டனை சாதாரணமாக நடப்பதாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் வழக்கத்தை மீறி போலீசு நிலையம் சென்றுள்ளனர். இதனாலும் ஆத்திரமடைந்த சாதி வெறியர்கள் 20-8-95 அன்று இரவு தாழ்த்தப்பட்ட மக்களின் வைக்கோல் போருக்கு தீ வைத்துள்ளனர். இது தொடர்பாகவும் உயரதிகாரிகளுக்கு முறையிட்டு எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற பயத்திலேயே கட்டிக்குளம் - சமயபுரம் குடியிருப்பு தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ளனர். இப்பகுதியிலுள்ள புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியினர் தாழ்த்தப்பட்ட மககளுக்கு ஆதவாக நின்று சுவரொட்டி இயக்கம் நடத்தியுள்ளனர்.

தென் மாவட்டங்களில் கல்வி - பொருளாதார ரீதியாக முன்னேறி வரும் தாழ்த்தப்பட்ட மக்களிடமுள்ள மாற்றங்களைக் கண்டு சகித்துக் கொள்ளாமல் மேல்சாதிவெறியர்கள் தாக்குதல்கள் தொடுத்து வருவதும் அது எந்நேரமும் கலவரமாக பற்றிக் கொள்ளும் நிலையும் கனன்று கொண்டே உள்ளதற்கு இச்சம்பவமும் ஓர் எடுத்துக்காட்டு.

தகவல்: பு.மா.இ.மு., மானாமதுரை வட்டம்.

---

தலைவர்களிடம் உள்ள பிழைப்புவாதம், சந்தர்ப்பவாதம், குறுகிய அரசியலற்ற பார்வை போன்றவை இவர்களின் கையாலாகாத்தனத்திற்கு அடிப்படைகளாக இருந்து தாழ்த்தப்பட்ட மக்களிடம் அதிருப்தி - வெறுப்பைத்தான் உருவாக்கியுள்ளன. இதனால் ஒன்று, ஜான்பாண்டியன் போன்ற "தாதா"க்களின் சாகசங்களைக் கண்டு மயங்கியும் அல்லது முஸ்லீம் - கிறித்துவ மதத்தினர் பிரச்சாரம் கண்டு மயங்கியும் பாதுகாப்பிற்காக அவர்கள் பின்னே தாழ்த்தப்பட்டவர்கள் அணி திரள்வது நடக்கிறது. தனக்குக் கட்டுப்படாத ஜான்பாண்டியன் போன்றவர்களை ஜெயா கும்பல் சிறையில் அடைத்து மிரட்டுவதும், தாழ்த்தப்பட்டவர்கள் மதம் மாறுகிறார்கள் என்றவுடன்தான் இந்து முன்னணிக் கும்பல் ஓடிவந்து "இந்து கரம்" நீட்டி பரிவுகாட்டுவதும் நடக்கின்றன.

ஜான்பாண்டியன் போன்ற 'தீவிரவாதிகள்' கைக்கோ, இந்து முன்னணி அல்லது முஸ்லீம் - கிறித்துவ மதவாதிகள் கைக்கோ தம்மக்கள் போய்விடக் கூடாது என்பதற்காகத்தான் அதே கையாலாகாத தாழ்த்தப்பட்ட சாதியத் தலைவர்கள் சவடால்களும் அதிரடி நடவடிக்கைகளும் மேற்கொள்கிறார்கள். இத்தகைய சாதிய முரண்பாட்டு பிரச்சினைகளின் போது போலிக்கம்யூனிஸ்டுகள் வர்க்கப் போராட்டம்தான் தீர்வு என வறட்டுத்தனமாகத் தீர்வை முன் வைக்கவும் தவறுவதில்லை.

> தாழ்த்தப்பட்டவர்கள் அடிமைத் தொழில்களை விடுவதையும் பிறரைப் போல் சமூக மதிப்பு கோருவதையும் சகித்துக் கொள்ளாது மேல்சாதியினரில் சிறுபிரிவினரே தாக்குதல் தொடுத்து சாதிய முரண்பாட்டை வளர்க்கின்றனர்.

அரசியல் - சமூகப் பார்வையைத் தவிர்த்து வெறும் சாதியப் போராட்டங்களினாலோ, சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களைத் தவிர்த்து வெறும் பொருளாதார - வர்க்கப் போராட்டங்களினாலோ இப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. உழைக்கும் மக்கள் வர்க்க ரீதியாக ஒன்று திரள்கிற அதே சமயம் சாதி - வர்ணாசிரம ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் சாதி வேறுபாடின்றி ஒன்று திரள வேண்டும்.

● சுப்பு



படிப்பகம்

www.padippakam.com




## குஜராத்:
# இந்து வெறியுடன் பதவி வெறியும்

அத்வானியும் அக்கிரகாரத்து துக்ளக் "சோ"வும் பீற்றிக் கொள்வது போல, பா.ஜ.க. வித்தியாசமான கட்சி அல்ல; கட்டுப்பாடு மிக்க கட்சியுமல்ல. அது பதவி வெறிபிடித்த பச்சை சந்தர்ப்பவாதக் கட்சிதான். பதவி நாற்காலியைக் காப்பாற்றிக் கொள்ள அது எந்த விலையும் கொடுக்கும்; யாரையும் பலி கொடுக்கும் என்ற உண்மைகளை குஜராத்தில் நடந்த கூத்துக்கள் மீண்டும் திரைகிழித்துக் காட்டிவிட்டது.

குஜராத்தில் காங்கிரசின் ஊழல் - ஒடுக்குமுறை கட்சி மாறிகளின் துரோகத்தனத்துக்கு எதிராக மக்கள் குமுறிக் கொண்டிருந்த நிலையில் இந்து வெறியூட்டி மாற்றுத் தலைமையாக உருவெடுத்த பா.ஜ.க. ஏறத்தாழ ஆறு மாதங்களுக்கு முன்பு ஆட்சியைக் கைப்பற்றியது. பா.ஜ.க.வின் வெற்றிக்கு முக்கியத் தூணாக விளங்கிய சங்கர்சின் வகேலா முதலமைச்சராவார் என்று கட்சி அணிகள் எதிர்பார்த்த வேளையில், அவர் பா.ஜ.க.வின் பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதால் முதலமைச்சர் பதவிக்குப் போட்டியிடக் கூடாது என்று ஆர்.எஸ்.எஸ். - அத்வானி கும்பல் சர்வாதிகாரமாக தடுத்தது. வகேலாவைப் புறக்கணித்து விட்டு தமது விசுவாசியான கேசுபாய் பட்டேலை முதலமைச்சராகத் திணித்தது. மேலும், வகேலா பிற்பட்ட சாதிக்காரர். பட்டேல் - பனியா - பார்ப்பனர் என்ற மேல்சாதி கூட்டணி கொண்ட ஆர்.எஸ்.எஸ். கும்பல், தமது வருணாசிரமக் கண்ணோட்டப்படி பட்டேலையே முதல்வராக்க ரகசிய உத்தரவிட்டது.

அத்வானியின் விசுவாசியான கேசுபாய் பட்டேல் அதிகாரத்தைக் கைப்பற்றியதும், வகேலாவின் ஆதரவாளர்கள் கட்சியிலும் ஆட்சியிலும் திட்டமிட்டே புறக்கணிக்கப்பட்டனர். வகேலா கோஷ்டியினர் பலமுறை நிர்பந்தித்து, திரைமறைவில் மிரட்டிய போதிலும் கூட முக்கியத்துவமற்ற அமைச்சர் பதவிகளே அவர்களுக்குத் தரப்பட்டன. பின்னர் நடந்த பஞ்சாயத்துத் தேர்தலின் போதும் வகேலாவின் ஆதரவாளர்களுக்குத் தேர்தல் டிக்கெட்டுகள் தரப்படவில்லை. அதன் பிறகு 52 வாரியங்களுக்கான தலைவர்கள் நியமிக்கப்பட்ட போதும் வகேலா கோஷ்டியினர் புறக்கணிக்கப்பட்டனர்.

கட்சிக்கு விசுவாசமாகப் பாடுபட்ட போதிலும் அதிகாரத்தில் தமக்கு உரிய பங்கு தரப்படாமல் புறக்கணிக்கப்படுவதைக் கண்டு ஆத்திரமடைந்த வகேலா, கட்சித் தலைமைக்கு எதிராக கலகக்கொடி தூக்கினார். தன் பின்னே 48 எம்.எல்.ஏக்களைத் திரட்டிக் கொண்டு மாநில ஆளுநரைச் சந்தித்தார். "பட்டேல் அரசு பெரும்பான்மையை இழந்துவிட்டது. புதிய அரசு அமைக்க எங்களை அழைக்க வேண்டும். சட்டமன்றத்தில் எங்களை தனிக்கட்சியாக அங்கீகரிக்க வேண்டும்" என்று முறையிட்டார்.

இந்நடவடிக்கைகளைக் கண்டு ஆத்திரமடைந்த பா.ஜ.க. தலைமை, வகேலாவைக் கட்சியை விட்டே நீக்கியது. வகேலா ஆதரவு எம்.எல்.ஏக்கள் மீது குண்டர்களை ஏவித் தாக்கியும், மந்திரிகளைக் கடத்திக் கொண்டு வந்தும் பெரும்பான்மையைக் காட்ட முயன்றது. இதற்கு சற்றும் சளைக்காத வகேலா, இரவோடு இரவாக தனி விமானம் மூலம் தனது கோஷ்டி எம்.எல்.ஏக்களை ம.பி.யிலுள்ள கஜுராஹோவுக்குக் கடத்திக் கொண்டு போனார். அக்டோபர் 7-ந் தேதியன்று நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து பட்டேல் அரசைக் கவிழ்க்கத் திட்டமிட்டார்.

வகேலாவின் சாகசங்களைக் கண்டு அதிர்ச்சியடைந்த இந்துவெறியர்கள், ஆட்சி பறிபோய் விடுமோ என்ற பீதியில் குஜராத்துக்கு ஓடி வந்தார்கள். பெருந்தலைகள் குஜராத்தில் முகாமிட்டு, எந்த வகேலாவைக் கட்சியை விட்டே நீக்கினார்களோ, அவரிடமே மண்டியிட்டுக் கெஞ்சினார்கள் எப்படியாவது ஆட்சியைக் காப்பாற்றுங்கள் என்று!

இதைத் தொடர்ந்து வகேலா கோஷ்டிக்கும் கட்சித் தலைமைக்குமிடையே ஒரு சமரச உடன்பாடு ஏற்பட்டது. நம்பிக்கை வாக்கெடுப்பில் வகேலா கோஷ்டி ஆதரவளித்து பா.ஜ.க. ஆட்சியைக் காப்பாற்றுவது, அதன் பிறகு பட்டேலை முதல்வர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு வகேலா ஆதரவாளரை புதிய முதல்வராக்குவது, முந்தைய வாரியத் தலைவர்களை பதவியிலிருந்து விலக்கி வகேலா ஆதரவாளர்களை நியமிப்பது என்ற உடன்பாட்டின்படி, அக் - 7-ந் தேதியன்று பா.ஜ.க. ஆட்சி நம்பிக்கை வாக்கெடுப்பில் உயிர் பிழைத்தது.

அதன் பிறகு பா.ஜ.க. தலைமை தனக்கே உரித்தான நரித்தனத்துடன் வகேலாவை ஏமாற்றி துரோகமிழைக்கக் கிளம்பியது. அத்வானி கும்பலின் ஏற்பாட்டின்படி, கேசுபாய் பட்டேலை முதல்வர் பதவியிலிருந்து நீக்கக் கூடாது என்று இந்துவெறி பரிவாரங்களும் சாதுக்களும் சாமியார்களும் தர்ணா போராட்டங்களை நடத்தினர். இவற்றைக் காட்டி, பா.ஜ.க. தலைமை வகேலாவிடம் புதிய பேரங்களையும் நிபந்தனைகளையும் விதித்தது. இதற்கிடையே பதவி பறிக்கப்படுவதைக் கண்டு அதிர்ச்சியடைந்த முதல்வர் பட்டேல் நெஞ்சுவலி ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் மாண்டுவிட்டால், பழி வகேலா மீதுதான் விழும் என்று அச்சுறுத்தி வகேலா ஆதரவாளரான ராணாவை முதல்வராக்காமல் பா.ஜ.க. தலைமை முட்டுக்கட்டை போட்டது. 25 நாட்கள் நடந்த இந்தக் குழப்பங்கள், பேரங்கள், திரைமறைவுச் சதிகளுக்குப் பிறகு 'நடுநிலையாளரான' சுரேஷ் மேத்தா புதிய முதல்வராக்கப்பட்டுள்ளார். இதன் மூலம் புதியதொரு கோஷ்டிக்கான அடித்தளமிடப்பட்டுள்ளது. பழைய நெருக்கடிகளைத் தீர்க்க புதியதொரு நெருக்கடியை உருவாக்கும் அதே காங்கிரசு பாணித் தீர்வுதான் இது. கோஷ்டிச் சண்டைகளை மேலும் தீவிரமாக்குவதில்தான் இது போய் முடியும்.

குஜராத் மட்டுமல்ல, நாடெங்கும் பா.ஜ.க. கட்சிக்குள் கோஷ்டிச் சண்டைகளும், கட்சியின் சர்வாதிகாரத் தலைமையை எதிர்த்து கலகங்களும் பெருகி வருகின்றன. உ.பி.யில் மாயாவதியின் சிறுபான்மை அரசு கவிழ்ந்ததும், மாநில பா.ஜ.க. புதிய அரசு அமைக்கத் துடிக்கிறது. அகில இந்தியத் தலைமையோ நாடாளுமன்றப் பொதுதேர்தல் நெருங்குவதால், கட்சியின் பெருமையை நிலைநாட்ட கௌரவமாக நடந்து கொள்ளும் நோக்கத்தோடு இப்போது ஆட்சியமைக்க வேண்டாம் என்கிறது. இம்முடிவை எதிர்த்து மாநில தலைமை கலகம் செய்து வருகிறது.

காங்கிரசுக்கு உண்மையான தேசிய மாற்று நாங்கள் தான் என்று மார்தட்டிக் கொண்ட பா.ஜ.க. இன்று பெருகிவரும் பதவிவெறி கோஷ்டிச் சண்டைகளால் நிலைகுலைந்து கிடக்கிறது. இந்து வெறியூட்டி மக்களை ஐக்கியப் படுத்துவது, கட்சிக்குள் சர்வாதிகாரத்தை ஏவி கட்டுப்பாடுமிக்க கட்சியாகக் காட்டுவது என்கிற பா.ஜ.க.வின் பாசிச உத்திகள் படுதோல்வி அடைந்து அதன் தேசிய முகத்திரை கிழிந்து கந்தலாகி தொங்குகிறது. இவற்றைச் சாதகமாக்கிக் கொண்டு இந்து வெறியர்களை அம்பலப்படுத்தி முறியடிப்பதுதான் இன்றைய தேவையாக உள்ளது.

● குமார்



படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்க

### பா.ஜ.க. - சிவசேனாவின் மேல்சாதி பற்று

மகாராஷ்டிரா மாநிலத்தில் 70-களின் இறுதியில் மரத்வாடா பல்கலைக்கழகத்தின் பெயரை அம்பேத்கர் பல்கலைக்கழகம் என மாற்றக் கோரி தாழ்த்தப்பட்டோர் அமைப்புகள் போராடின. இப்பெயர் மாற்றத்தை எதிர்த்த மரத்வாடா - மற்றைய மேல்சாதி வெறியர்கள் தாழ்த்தப்பட்டோரின் மீது வன்முறைத் தாக்குதலை ஏவி விட்டனர். தீண்டாமைச் சட்டத்தின் கீழ், மேல்சாதி குண்டர்களின் மீது அப்பொழுது பதிவு செய்யப்பட்ட வழக்குகள் அனைத்தையும் திரும்பப் பெற்றுக் கொள்வதாக சமீபத்தில் அறிவித்துள்ளது பா.ஜ.க. - சிவசேனா கூட்டணி அரசு. அரசின் இம்முடிவுக்கு எதிராக எழுந்த எதிர்ப்புகளுக்கு, ''இது எங்களின் தேர்தல் வாக்குறுதி'' எனத் திமிர்த்தனமாக அறிவித்துள்ளது அக்கும்பல்.

### கில்லின் மீது நீதிமன்ற விசாரணை

கடந்த 1988-ம் வருடம் பஞ்சாப் மாநிலத் தலைநகரில் நடந்த பிரிவு உபசார விருந்தில் கலந்து கொண்ட பஞ்சாப் மாநில தலைமை போலீசு அதிகாரி கில், குடிபோதையில் ரூபன் தியோல் பஜாஜ் என்ற பெண் அதிகாரியிடம் முறைகேடாக நடந்திருக்கிறார். தன்னைக் களங்கப்படுத்த முயன்ற கில்லைத் தண்டிக்கக் கோரி அப்பெண் அதிகாரி கொடுத்த புகார் மனுவை முதலில் பஞ்சாப் போலீசும் பின்னர் பஞ்சாப் உயர்நீதி மன்றமும் எவ்வித விசாரணையுமின்றி ''ஆதாரமில்லை'' எனக் கூறி தள்ளுபடி செய்துவிட்டன. இதனை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் அவர் கொடுத்த மனுவை விசாரித்த நீதிபதிகள், ''வழக்கு நடத்துமளவுக்கு இக்குற்றச்சாட்டில் சான்று இருப்பதாகத் தாங்கள் கருதுவதாகவும், எனவே வழக்கை நடத்துமாறும்'' பஞ்சாப் நீதிமன்றத்திற்கு உத்தரவிட்டுள்ளனர்.

### பிரான்சைக் கிடுகிடுக்க வைத்த வேலை நிறுத்தம்

''1996-க்குப்பின் பொதுத்துறை மற்றும் அரசுத் துறையைச் சேர்ந்த ஊழியர்களுக்கு சம்பள உயர்வு கிடையாது; புதிதாக ஊழியர்களும் நியமனம் செய்யப்படமாட்டார்கள்'' என முடிவெடுத்து பிரான்சு அரசு அறிவித்தது. அரசின் இத்தொழிலாளர் விரோதக் கொள்கையை எதிர்த்து, கடந்த அக்டோபர் மாதம் 10-ந் தேதியன்று அந்நாட்டுத் தொழிலாளர்கள் ஒருநாள் அடையாள வேலைநிறுத்தம் செய்தனர். ஐம்பது லட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்களும் ஊழியர்களும் பங்கெடுத்த இவ்வேலை நிறுத்தத்தையொட்டி கண்டன ஆர்ப்பாட்ட பேரணிகளும் நாடெங்கும் நடைபெற்றன. கடந்த பத்தாண்டுகளில் பிரான்சில் நடைபெற்றுள்ள முதல் பிரம்மாண்டமான வேலை நிறுத்தம் இதுதானென்றும், அன்று பிரான்சு நாடே நிலைகுலைந்து போனதென்றும் செய்திகள் வெளிவந்துள்ளன.




பிரான்சை நிலைகுலைய வைத்த வேலை நிறுத்தம்

### அமெரிக்க 'நீதி'மன்றத்திலும் நிறவெறி

அமெரிக்காவில் ஒரே மாதிரியான குற்றங்களுக்கு வெள்ளையர்களுக்கு குறைந்த கால தண்டனையும் கருப்பு இனத்தவருக்கு கூடுதல் தண்டனையும் வழங்கப்பட்டு வருவது அம்பலமாகியுள்ளது. 80,000 ஒரே மாதிரியான குற்ற வழக்குகளில் வெள்ளையர்களுக்கு 30 மாத கால தண்டனையும் கருப்பர்களுக்கு 36 மாத கால தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. ''போதை மருந்து பழக்கம் மற்றும் கடத்தல் தொடர்பான வழக்குகளில் இப்பாரபட்சம் வெளிப்படையாகத் தெரிவதாக'' இப்பிரச்னையை ஆய்வு செய்த வல்லுநர்கள் குறிப்பிட்டுள்ளனர். ''சட்டத்தின் முன் அனைவரும் சமம்'' எனப்படும் ஜனநாயக மாண்பு எப்படி கேலிக் கூத்தாகிவிட்டது பாருங்கள்!

### ''எங்கப்பன் குதிருக்குள் இல்லை''

மெக்சிகோ நாடு திவாலானபொழுது ஏகாதிபத்திய நாடுகளால் அதற்கு உடனடியாக உதவ முன்வர முடியவில்லை. அவர்கள் உதவி வழங்குவதற்குள்ளாகவே மெக்சிகோவில் பிரச்சினை கையை மீறிச் சென்றுவிட்டது. மெக்சிகோவின் சரிவு உலகெங்கும் அச்சத்தை ஏற்படுத்தவே, ''மெக்சிகோவின் நாணய வீழ்ச்சி தாராளமயமாக்கலின் விளைவாக ஏற்படவில்லை'' என வியாக்கியானம் அளித்தன ஏகாதிபத்திய நாடுகள். தற்பொழுதோ ஏழு பெரும் கூட்டணி நாடுகள் அமைப்பில் மெக்சிகோவைப் போன்று வேறு ஏதாவதொரு நாட்டில் பிரச்சினை ஏற்பட்டால் விரைந்து பிரச்சினையைச் சமாளிப்பதற்காக 1,50,000 கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கியுள்ளனர்.

### முடமாகிக் கிடக்கும் பூகம்ப நிவாரணம்

மகாராஷ்டிரா மாநிலத்தில் லட்டூர் பகுதியில் பூகம்பம் தாக்கி இரண்டு வருடங்கள் ஓடி மறைந்து விட்டன. நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அரசு 1084 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருந்தது. அரசின் நிதி உதவியோடு பல்வேறு சமூக நல அமைப்புகளும் தனி மனிதர்களும் கூட நிவாரணப் பணிகளுக்காக அரசுக்குப் பண உதவி அளித்திருந்தனர். சமீபத்தில் மகாராஷ்டிர மாநில உயர் நீதிமன்றம் நிவாரணப் பணிகள் பற்றி ஆய்வு செய்ய கமிஷன் ஒன்றை நியமித்தது. இக்கமிஷன் தனது அறிக்கையில், ''கடந்த ஒன்றரை வருடங்களில் பாதிப்புக்குள்ளான எந்தவொரு பகுதியிலும், அரசு ஒரு ஓலைக் குடிசையைக் கூட கட்டிக் கொடுக்கவில்லை'' எனக் குறிப்பிட்டுள்ளது. பல அமைப்புகள் நிவாரண உதவி குறித்து கொடுத்த மனுக்களை விசாரித்த பொழுது தான் அரசின் இந்த அலட்சியப் போக்கு அம்பலமானது.



படிப்பகம்

www.padippakam.com

# திடீர் பணக்கார அரசியல் ரவுடிகளை ஒழிக்கப் போராடும் புரட்சியாளர்கள்

மக்கள் கலை இலக்கியக் கழகம் (ம.க.இ.க.) விவசாயிகள் விடுதலை முன்னணி, (வி.வி.மு.) புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி (பு.மா.இ.மு) - இம்மூன்று புரட்சிகர அமைப்புகளும் ஒன்றிணைந்து திடீர் பணக்கார அரசியல் ரவுடிகளுக்கெதிரான இயக்கமொன்றைக் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாகத் தமிழகமெங்கும் எடுத்து வருகின்றன. ரவடிகள், கிரிமினல்கள், சமூக விரோதிகள், திடீர் பணக்காரர்கள், ஊழல் அதிகாரிகள், போலீசு ஆகியோரைக் கொண்டு உருவாகித் தமிழகத்தையே கொள்ளையடித்துக் கோலோச்சி வரும் ஒட்டுண்ணிக் கும்பலான இத்திடீர் பணக்கார அரசியல் ரவுடிகளைச் சுவரெழுத்து, சுவரொட்டி, பிரசுரம், மிதிவண்டி ஊர்வலம், தெருமுனை மற்றும் பொதுக்கூட்டங்கள் என சாத்தியமான அனைத்து வழிகளிலும் மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தி இயக்கம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சுவரெழுத்துகளை அழிப்பது, தனிப்பட்ட முறையில் மிரட்டுவது போன்று வாலாட்டிய சில அரசியல் ரவுடிகள், இவ்வியக்கத் தோழர்களது போர்க்குணமிக்க செயல்பாடுகளைக் கண்டும், மக்கள் மத்தியில் இவ்வியக்கத்திற்குப் பெருகி வரும் செல்வாக்கைக் கண்டும் பின்வாங்கிக் கொண்டனர்; இவ்வியக்கம் அனைத்துத் தரப்பு மக்களின் ஆதரவையும் பெற்று முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதனைத் தமிழகமெங்கிலுமிருந்து இவ்வியக்கம் தொடர்பாக வரும் செய்திகள் கட்டியங் கூறுகின்றன.

● நெய்வேலியில் சொரத்தூர் இராசேந்திரன் எனும் அரசியல் ரவுடி, திடீர் பணக்கார ரவுடிக் கும்பலை அம்பலப்படுத்தி எழுதியிருந்த சுவரெழுத்துகளை எடுபிடிகளை ஏவி அழித்தான். இதற்கெதிராக இவனுக்கு எச்சரிக்கை விடுத்து, தோழமை அமைப்பான தொழிலாளர் பிரச்சாரக் குழுத் தோழர்கள் சுவரொட்டிகளை நகரெங்கும் ஒட்டினர். கடும் பின்விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என உணர்ந்த இந்த அரசியல் ரவுடி தற்பொழுது இயக்கத்துக்கு இடையூறு செய்வதை நிறுத்திக் கொண்டு விட்டான்.

மற்றொரு அரசியல் ரவுடி ஆதண்டார் கொல்லை இராசேந்திரன், 12.09.95 அன்று சுவரெழுத்து எழுதிக் கொண்டிருந்த தோழர்களை 10-க்கும் மேற்பட்ட அடியாட்களுடன் சுற்றிவளைத்து, ''ரிவால்வரை எடுத்துச் சுடுடா'' என மிரட்டியுள்ளான். அவனது வெற்று பயமுறுத்தல்களுக்கு உறுதியுடன் தக்க பதிலடி கொடுத்தனர், தொ.பி.கு. தோழர்கள். பிரச்சினை கண்டு அங்கு கூடிய பொதுமக்கள், ''அவர்கள் நக்சல்பாரிகள்'' என ரவுடிக் கும்பலை எச்சரித்தனர். இவனின் ரவுடித்தனம் குறித்து உடனடியாக நகரெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

● ஆண்டிப்பட்டி வட்டாரம் பகுதியில் செயல்படும் வி.வி.மு. அமைப்பினர், தேனியில் இருந்து உசிலம்பட்டி வரை இப்பகுதி சட்டமன்ற உறுப்பினர் தவசியை அம்பலப்படுத்தி எழுச்சிகரமாகச் சுவரெழுத்துப் பிரச்சாரம் செய்துள்ளனர். இதனால் பீதியடைந்து போன தவசி, தனது அடியாட் படையை கட்டமாயின் என்பவன் தலைமையில் ஜீப்பில் அனுப்பிச் சுவரெழுத்துகளை அழித்துவிட்டு, தனது வீட்டு காதணி விழாவினை விளம்பரமாக எழுதி வைத்தான். ''திட்டமிட்டே நமது இயக்கத்தை மறைக்கிறான்'' என உணர்ந்த வி.வி.மு. தோழர்கள் தகுந்த பாதுகாப்புடன் அணி வகுத்துச் சென்று அவனது சுவரெழுத்துகளை அழித்துவிட்டு, எதிர்ப்பியக்க முழக்கங்களை எழுதினர். முழக்கங்கள் எழுதிய தோழர்களை மக்கள் கூடி நின்று பாராட்டினர்; அ.தி.மு.க.வினரும் இதைக் கண்டு வியந்தனர். சி.பி.ஐ. கட்சியினர் நடத்திய தர்ணா போராட்டத்தில் சுவரெழுத்துகளை தவசி அழித்ததைக் கண்டித்துப் பேசியுள்ளனர்.

● உசிலம்பட்டி பகுதியில் இயங்கி வரும் வி.வி.மு. அமைப்பினர், சட்டமன்ற உறுப்பினர்களான தவசி மற்றும் பாண்டியம்மாளை அம்பலப்படுத்தி இயக்கத்தை முன்னெடுத்து வருகின்றனர். எம்.எல்.ஏ. தவசி தனது எடுபிடியான பாண்டியன் போக்குவரத்துக் கழக தொழிற்சங்க தலைவனை ஏவி இயக்கச் சுவரெழுத்துகளை அழித்தான்; அழிக்கப்பட்ட இடங்களில் எச்சரிக்கை விடுத்து சுவரெழுத்து மீண்டும் எழுதப்பட்டது. பாண்டியம்மாள் தான் கொள்ளையடித்துச் சேர்த்து வைத்த சொத்து அம்பலமாவதைக் கண்டு அரண்டு போய், ''தான் முறையாகக் கணக்கு வைத்திருப்பதாக'' அ.தி.மு.க. பொதுக்கூட்டங்களில் பிதற்றித் திரிகிறார்.



● பெண்ணாகரத்தில் திடீர் பணக்கார அரசியல் ரவுடிகளை அம்பலப்படுத்திப் பேருந்துப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தர்மபுரி மாவட்ட வி.வி.மு. அமைப்பாளர் தோழர். ஆம்பள்ளி முனிராஜையும் மற்றொரு தோழர் முருகனையும் போலீசு கைது செய்தது. விசாரிக்கச் சென்ற பெண்ணாகரம் வட்ட வி.வி.மு. செயலர் ராஜனும் சிறையில் தள்ளப்பட்டார். நீதிமன்ற விசாரணையின்பொழுது இம்மூன்று தோழர்களும் தங்கள் இயக்கத்தின் நோக்கங்களையும் பிரச்சார உரிமையினை போலீசு காலில் போட்டு மிதித்துள்ளதையும் நீதிபதியிடம் எடுத்துக்கூறி விளக்கிப் பேசினர். நீதிபதியோ, ''நீங்கள் சொல்வதெல்லாம் உண்மை தான்; ஆனால் போலீசோ உங்களைப் பிணையில் விட இயலாத பிரிவுகளில் வழக்கு பதிவு செய்துள்ளது. ஆதலால் என்னால் உங்களை விடுதலை செய்ய முடியாது'' என நீதித்துறையின் கையாலாகாதனத்தை ஒப்புக் கொண்டார். போலீசோ திடீர் பணக்கார அரசியல் ரவுடிகளுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு, பேருந்துப் பிரச்சாரம் செய்வதைத் தொடர்ச்சியாகத் தடுத்து வருகிறது; இயக்கத் தோழர்களை 'வன்முறையாளர்கள்' என முத்திரை குத்தி அவதூறு செய்கிறது.

● உத்தமபாளையம் பகுதியில் வி.வி.மு.. அமைப்பினர் எழுதியிருந்த சுவரெழுத்துகளை அப்பகுதி திடீர் பணக்கார அரசியல் ரவுடியான கம்பம் இராஜாங்கம் தனது அடியாட்களை ஏவி அழித்துள்ளான். அதே இடங்களில் அவனுக்கு எச்சரிக்கை விடுத்து மீண்டும் சுவரெழுத்துப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் அந்த ரவுடி வி.வி.மு. தோழர் ஒருவரின் வீட்டிற்கு அடியாட்களை அனுப்பி மிரட்டியதோடு, வீட்டில் இருந்த பெண்களைத் தரக்குறைவாகத் திட்டிச் சென்றுள்ளனர். பகுதியினைச் சேர்ந்த நான்கு தோழர்கள் நேரடியாக அவனது வீட்டிற்கே சென்று எச்சரித்தனர். உடனே அந்த ரவுடி, ''தனக்கே தெரியாமல் இது நடந்துவிட்டது என நயந்து பேசினான்.

போடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பன்னீர் செல்வம் அடியாட்களை அனுப்பி வி.வி.மு. தோழர்களைப் பேச்சு வார்த்தைக்கு அழைத்தார், வி.வி.மு.வி

www.padippakam.com

ளர் பேச்சுவார்த்தைக்கெல்லாம் வரமுடியாது என மறுத்துவிட்டனர். உத்தமபாளையம் பகுதியினைச் சேர்ந்த மற்றொரு ரவுடியான கூடலூர் இராமன், இவ்வட்டார வி.வி.மு. செயலர் மோகனை வழிமறித்து, ''நீயா நானா பார்த்துவிடுவோம்'' என மிரட்டிச் சென்றுள்ளான்.

● விருத்தாசலம் பகுதியில் பு.மா.இ.மு. தலைமையில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி. அரங்கநாதன், ஜெயின் ஜுவெல்லரி அசன் சந்த் ஆகியோரை அம்பலப்படுத்தி இயக்கம் மேற்கொள்ளப்படுகிறது. சுவரெழுத்துப் பிரச்சாரம் தொடங்கிய பின்பு, எம்.எல்.ஏ. அரங்கநாதன் தனது அடியாட்களை அனுப்பி பு.மா.இ.மு. தோழர்களை மிரட்ட முயன்று தோற்றோடிப் போனான்.

விருத்தாசலத்திலுள்ள ஆர்.டி.ஓ. அலுவலகத்துக்கு எதிராக சுவரெழுத்து பிரச்சாரம் மேற்கொண்டிருந்த பொழுது, ஆர்.டி.ஓ. பாஷா, ''எழுதியதை அழித்துவிட்டுச் செல்லுங்கள்'' என அதிகார வர்க்கப் பாணியில் உத்தரவிட்டார். அதற்குத் தோழர்கள் மறுத்து விட்டனர். பின்னர் ஆர்.டி.ஓ. போலீசை வரவழைத்து, சுவரெழுத்தை அழிக்கச் செய்துள்ளார். இவ்வாறாக மக்கள் விரோதிகள் அம்பலப்பட்டு போவதைத் தடுத்து நிறுத்த போலீசும் - அதிகார வர்க்கமும் பகீரத முயற்சி செய்து வருகின்றனர்.

● சென்னையில் உள்ள வடபழனி பேருந்து நிலையத்தில் கடந்த 15.9.95 அன்று ம.க.இ.க. மாநிலப் பொருளாளர் சீனிவாசனும் பு.மா.இ.மு. தோழர் புவனும் அரசியல் ரவுடிகளை அம்பலப்படுத்தி பேருந்துப் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தனர். அப்பொழுது இவ்வமைப்புகளின் மீது ஏற்கனவே பகை கொண்டிருந்த பல்லவன் போக்குவரத்துக் கழக அ.தி.மு.க. தொழிற்சங்கத்தைச் சேர்ந்த ரவுடி ஒருவன் இப்பிரச்சாரத்தினால் மேலும் ஆத்திரமடைந்து ஆட்களைத் திரட்டி வந்து, இரும்புக் குழாய்களையும், கம்பிகளையும் கொண்டு தோழர்கள் இருவரையும் தாக்கியுள்ளான். தோழர் சீனிவாசன், தோழர். புவனைப் பணிமனைக்குள் தூக்கிச் சென்று தாக்கினர்.

பின்னர் அ.தி.மு.க. ரவுடிகள் தோழர். புவனைப் போலீசிடம் ஒப்படைத்துவிட்டு, கடுமையாகத் தாக்குவதற்கும் வழக்குப் போடுவதற்கும் இலஞ்சமும் கொடுத்துள்ளனர். இதற்குள்ளாகவே தோழர்களைத் தாக்கிய அ.தி.மு.க. ரவுடியை அம்பலப்படுத்தி அப்பகுதியெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. இதனைக் கண்டு அரண்டு போன அந்த அ.தி.மு.க. ரவுடி, ''தான் ஓர் அரசு ஊழியன்; வழக்கு என வந்தால் தனது வேலைக்குப் பாதகம் வரும்'' எனச் சமரசம் பேசி புகாரைத் திரும்பப் பெற்றுக் கொண்டான்.

## தலைமையின் அநீதிக்கெதிராகப் போராடும் சி.ஐ.டி.யு. கிளை

சி.ஐ.டி.யு. தலைமை தனது சங்கத்தின் வெள்ளி விழாவினை சமீபத்தில் ஆடம்பரமாகக் கொண்டாடியது. இதற்காக கோவையில் தேசியப் பஞ்சாலைக் கழகத்தின் கீழ் இயங்கி வரும் முருகன் மில் நிர்வாகத்திடம் 1000 ரூபாய் பணமாகவும் 1000 ரூபாய் காசோலை மூலமாகவும் நன்கொடை பெற்றுள்ளது சி.ஐ.டி.யு. தலைமை. கோவையெங்கும் அரசு மற்றும் தனியார் மில் நிர்வாகத்தினரிடமும் கந்துவட்டிக்காரர்களிடம் இவ்விழாவிற்காக கூச்சமின்றி நன்கொடை வசூலித்துள்ளனர் சி.ஐ.டி.யு.வினர்.

கோவைப் பகுதியில் 30.8.95 அன்று நடந்த ஊழியர் கூட்டத்தில் முருகன் மில் சி.ஐ.டி.யு. தொழிலாளர்கள் தலைமைச் செயலர் N. அச்சுதனிடம், ''நிர்வாகத்திடம் நன்கொடை வாங்குவது எவ்வகையில் நியாயமானது'' எனக் கேள்வி எழுப்பினர். முதலில் தலைமையின் இந்த ஈனச் செயலை மறுத்த N. அச்சுதன், பின்னர் வாங்கியதை ஒப்புக் கொண்டு ''இதில் தவறில்லை'' என நியாயப்படுத்திப் பேசியுள்ளார். தொழிலாளர்கள் ஆத்திரமடைந்து கேள்விகள் எழுப்பவே, ''இனி எந்தக் கேள்விக்கும் பதில் கூறமாட்டேன்'' எனக் கூட்டத்தை முடித்துக் கொண்டு விட்டார்.

02.09.95 அன்று பேச்சு வார்த்தைக்குச் சென்ற முருகன் மில் சி.ஐ.டி.யு. கிளைச் செயலர் ப். இராமசாமியை, ''நீ பேச்சுவார்த்தைக்கு வரக் கூடாது'' என அதிகார வர்க்கப் பாணியில் முடிவெடுத்து வெளியேற்றியுள்ளார் அச்சுதன். ''தொழிலாளர்களுக்குத் தெரியாமல் செயலர் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது'' எனக் கூறி, பொதுச் செயலாளர் M. நஞ்சப்பனிடம் சென்று நியாயம் கேட்டனர் முருகன் மில் தொழிலாளர்கள். அவரோ, ''அப்படித்தான் செய்வோம். கிளைச் செயலர் மீது தலைமைக்கு நம்பிக்கை போய் விட்டது; அவர் தன்னைக் குற்றமற்றவர் என நிரூபிக்கட்டும்'' என ''தடா'வை உயிர்ப்பிக்கச் செய்து, தொழிற்சங்க ஜனநாயகத்தைக் குழிதோண்டி புதைத்து விட்டார். சங்க விதிமுறைகளைக் கேட்ட தொழிலாளர்களை ஆறு மாத காலமாக இழுத்தடித்துப் பின்பு, ''தரமுடியாது'' எனச் சர்வாதிகாரமாக மறுத்துவிட்டார், நஞ்சப்பன்.

அடுத்ததாக, முருகன் மில்லில் பீஸ்ரும் தொழிலாளர்கள் மீது அதிகமான வேலைப்பளுவினைச் சுமத்தியது மில் நிர்வாகம். இதை எதிர்த்து அவர்கள் போராடத் துவங்கியபொழுது பிற பிரிவு தொழிலாளர்கள் அப்போராட்டத்தை ஆதரிக்காதவாறு தொழிலாளர்கள் மத்தியில் பிரிவினையைத் தூண்டிவிட்டது சங்கத் தலைமை. நிர்வாகத்துடன் சேர்ந்து கொண்டு போலீசு பட்டாளத்தை ஆலையினுள் நுழைய விட்டு, தொழிலாளர்களை மிரட்டியே வேலைப் பளுவிற்குச் சம்மதம் தெரிவிக்க வைத்தது. சி.ஐ.டி.யு. வின் இக்கட்டைப் பஞ்சாயத்து முறையை அம்பலப்படுத்தி கிளைத் தொழிலாளர்கள், ''சங்கம் எதற்கு? நீதிமன்றம் எதற்கு?'' எனக் கேள்வி எழுப்பினர். இதனால் ஆத்திரமாகிப் போன சி.ஐ.டி.யு. முழுநேர உறுப்பினர் கே. வேணுகோபால், முருகன் மில் சி.ஐ.டி.யு. கிளைச் செயலரை, ''மகநாய், தெரு நாய்'' எனத் திட்டி அவதூறு செய்துள்ளார். இவ்வாறாக சி.ஐ.டி.யு. தலைமையின் பண்பாடு, 17.09.95 அன்று நடந்த வாயிற் கூட்டத்தில் சந்தி சிரித்துப் போனது.

தங்களது சொந்த அனுபவங்கள் வாயிலாக சி.ஐ.டி.யு. தலைமையின் தொழிலாளி வர்க்கத் துரோகத்தனத்தையும், அராஜக - மோசடிப் பண்புகளையும் புரிந்து கொண்ட முருகன் மில் சி.ஐ.டி.யு. சங்கத் தொழிலாளர்கள் வாளாயிருந்து விடவில்லை. உண்மைகளைப் பிறரும் அறிந்து கொள்ளும் வண்ணம் பிரசுரங்களாக அச்சடித்து, சி.ஐ.டி.யு. தலைமையை அம்பலப்படுத்தியுள்ளனர். ''சி.ஐ.டி.யு. தொழிலாளர்களே, தவறு செய்யும் தலைமைக்கு எதிராகப் போராடுங்கள்; நேர்மையும் நியாயமும் புரட்சிகர உணர்வும் நமக்குத் துணை நிற்கும்'' என அறைகூவல் விடுத்துள்ளனர்.

*தகவல்; தொழிலாளர் பிரச்சாரக் குழு, கோவை.*



படிப்பகம்

www.padippakam.com

# சேவைப்பணியும் தனியாருக்கு வரிமட்டும் நகராட்சிக்கா?

"அரசுத்துறை சேவையில் தரமில்லை, பொறுப்பில்லை, கண்காணிப்பு இல்லை, உடனடி ஒத்துழைப்பு இல்லை என்றால் அரசுத்துறை சேவையையே ஒழித்துவிடு" என்பதுதான் இன்றைய ஆட்சியாளர்களின் தாரக மந்திரம். அதாவது தரம், பொறுப்பு, உடனடி ஒத்துழைப்பிற்காக அரசுத்துறைப் பணிகளை எல்லாம் தனியாருக்கு விட்டுவிடுவதுதான் ஆட்சியாளர்கள் தரப்பு தீர்வாகும். இப்படி தனியாருக்கு தாரை வார்க்கப்பட்டதில் நகராட்சி - மாநகராட்சி பொது சேவைப் பணிகளும் தப்பவில்லை. இந்தியாவில் மாநகராட்சிகள் உட்பட 20-க்கும் மேற்பட்ட நகராட்சிகளின் சேவைப் பணிகளில் 50 சதவிகிதம் தனியார் கைக்கு போய்விட்டது.

1981-ல் 10 லட்சத்திற்கு மேல் இருந்த சென்னை நகர மக்கள் தொகை 1991-ல் 40 லட்சமாகியது. நகரக்கூடிய மக்கள் தொகை 10 லட்சம். வருடந்தோறும் இது 10 சதவிகிதம் அதிகரித்து வருகிறது. இம்மக்கள் தொகைக்குத் தேவையான அடிப்படை சேவைப் பணிகளை செய்கிற நிலையில் சென்னை மாநகராட்சியிடம் நிதியோ, ஆட்களோ, உபகரணங்கள் மற்றும் பிற வசதிகளோ இல்லை. புதிதாக வேலைக்கு ஆள் எடுக்காத நிலையில், இருக்கும் தொழிலாளர்களின் தலையில்தான் வேலைச்சுமை கூடியது. சென்னை மாநகராட்சியிலுள்ள 7,185 துப்புறவு தொழிலாளர்களின் எண்ணிக்கையை "விருப்பபூர்வ ஓய்வுத் திட்டத்தின்" கீழும் பணம் கொடுத்து வீட்டுக்கனுப்பி வருகிறார்கள்.

சென்னை நகரில் நான்கு, ஐந்து வருடங்களுக்கு முன்பு ஒருநாளைக்கு 1000 டன் குப்பைகள் அப்புறப்படுத்த வேண்டியிருந்தது. தற்போதோ, ஒருநாளைக்கு 2500 டன் குப்பைகளை அப்புறப்படுத்த வேண்டியுள்ளது. ஆனால் இருக்கும் துப்புறவு தொழிலாளர்களைக் கொண்டு 30 சதவிகிதம் குப்பைகள்தான் அகற்ற முடியும். எனவே இப்பணியை சில தன்னார்வ குழுக்களின் கையில் ஒப்படைத்து விட்டது, மாநகராட்சி. அடையார், திருவான்மியூர், அண்ணாநகர், மேத்தாநகர், தி. நகர், கே.கே.நகர், கோடம்பாக்கம் சைதாப்பேட்டை, ஆயிரம் விளக்கு போன்ற பல பகுதிகளை எக்ஸ்னோரா, ராகா (RAGA), டான்பாஸ்கோ அன்பு இல்லம், ஆஷா நிவாஸ், நேசக்கரம், ஆசியன் யூத் சென்டர், ரோட்டரி கிளப், குடியிருப்போர் நல சங்கம் முதலியவைகளுக்கு பிரித்து கொடுத்திருக்கிறது. இது வல்லாமல் திருமணமண்டபங்கள், மருத்துவமனைகள், ஹோட்டல்கள், அடுக்கு மாடி அங்காடிகளின் குப்பைகளை பிளாஸ்டிக் பை முறைகளில் அகற்ற சில தனியார் நிறுவனங்கள் பொறுப்பேற்றுள்ளன.

இந்நிறுவனங்களுக்கு சில உரிமைகளையும் சலுகைகளையும் மாநகராட்சி செய்து தருகிறது. இந்நிறுவனங்கள் குப்பை அகற்றும் பணிக்கு மிகக் குறைந்த கூலியில் (மாதம் ரூ 400) தொழிலாளர்களை அமர்த்திக் கொண்டு அதிக வேலை வாங்கி கசக்கிப் பிழிகின்றன. இவைகள் வாகனங்கள், கொசு மருந்து தெளிப்பதற்குரிய உபகரணங்கள் போன்றவை வாங்குவதற்கு வங்கியில் முன்னுரிமை, குப்பை அகற்றும் பகுதியிலுள்ள குடியிருப்போர், கடைக்காரர்களிடம் தனிநிதி வசூலிக்க உரிமை என பல சலுகைகளுடன் வெளிநாடுகளிலிருந்தும் இதற்கென ஏராளமான நிதியைப் பெறுகின்றன. இவை பெரும்பாலும் மேட்டுக்குடி மக்கள், வியாபாரிகள், முதலாளிகளுக்குரிய பகுதிகளிலேயே சேவை செய்கின்றன. கண்துடைப்புக்காக, கணக்கிற்காக சேரிப் பகுதிகளில் சில பணிகளை மேற்கொள்கின்றன.

மற்றபடி நடுத்தர மக்கள், தொழிலாளர்கள் குடியிருப்பு பகுதிகளில் அம்மக்களே சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக் கொள்வதால்தான் சென்னை நகரம் தப்பி பிழைக்கிறது. இப்பகுதிகளில் குப்பைகளை அள்ளுவதற்கு மாநகராட்சியின் "லாரிகள்" - மாட்டுவண்டிகள் - கைவண்டிகள் எப்பொழுதாவது வருகின்றன. நாளடைவில் இப்பகுதிகளும் தனியார் பொறுப்பில் ஒப்படைக்கப்படும் என்றும் மாநகராட்சி அறிவிக்கிறது.

> நகராட்சியை வெறும் நிர்வாக - நிதி விவகாரங்களை கவனிக்கும் உறுப்பாக மாற்றி மக்களுக்கு வேண்டாத சதை பிண்டமாக்குகிறார்கள்.

நகரின் குப்பைகளை அருகிலுள்ள பெருங்குடி, கொடுங்கையூரில் கொட்டிக் குவித்து, அதிலிருந்து மின்சாரம் தயாரிப்பது, உரமாக மாற்றுவது, காகிதம் - பிளாஸ்டிக் - இரும்பு பொருட்களை உருக்கி மறு உருவாக்கம் செய்வது போன்ற திட்டங்களை "டிட்கோ" உதவியுடன் செய்து லாப மீட்டுகிறது, மாநகராட்சி. தற்போது இவற்றையும் தனியாருக்கு கொடுத்துவிட்டார்கள். பெங்களூரைச் சேர்ந்த ஒரு தனியார் நிறுவனம் மற்றும் இ.ஐ.டி. பாரிஸ் கம்பெனி ஆகியவைகளுக்கு மேற்கண்ட உற்பத்திகளை தாரை வார்த்து ஒரு டன் குப்பைக்கு குறைந்த தொகை 10 ரூ மட்டுமே தற்போது வருமானமாகப் பெறுகிறார்கள். இத்தகைய உற்பத்தி போக தினம் 1500 டன் குப்பைகள் தேங்குவதில் அப்பகுதியைச் சுற்றியுள்ள பல குடும்பங்கள் பொருட்களை பொறுக்கியெடுத்து விற்று பிழைப்பு நடத்துகின்றன. தற்போது இவர்கள் வயிற்றிலும் அடிக்கிறது, மாநகராட்சி. எஞ்சிய குப்பைகளில் உற்பத்தி பிரிவைத் தொடங்க டாடா குழுவைச் சேர்ந்த எக்ஸெல் நிறுவனம் மாநகராட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

இப்படி வருமானமில்லா செலவினங்கள் உள்ள பணிகள் தனியார் சேவை நிறுவனங்கள் கைக்கும், வருமானமுள்ள செலவினங்கள் கொண்ட பணிகள் - உற்பத்திகள் எல்லாம் தனியார் கம்பெனிகளின் கொள்ளைக்கும் மாற்றப்பட்டு விட்டன. குப்பை ஒரு உதாரணம்தான்.

பூச்சி - கொசு மருந்து தெளிப்பது, மலேரியா போன்ற தொற்று நோய் தடுப்பூசி - முகாம்கள், தெருக்குழந்தைகள் நலத்திட்டம், தெருவாசிகளுக்கு பொது தங்குமிடம், முதியோருக்கான நலத்திட்டங்கள், பள்ளி குழந்தைகளுக்கான நோய் தடுப்பு முகாம், பெண்களுக்கான குடும்பக் கட்டுப்பாடு திட்டம், கண்ணாடி வழங்கும் முகாம், சாலையோரங்களில் மரங்கள் நடுவது, மன நோயாளிகள் பாதுகாப்பகம், சாலை நடுவே தடுப்புகள் அமைப்பது, நகரின் பூங்காக்களை பராமரிப்பது முதலியவற்றை தன்னார்வ சேவை நிறுவனங்கள் தனித்தோ, மாநகராட்சியுடன் கூட்டு சேர்ந்தோ செய்து வருகின்றன. சில தனியார் தொழிலதிபர்கள், முதலாளிகள், வங்கிகளையும் இச்சேவைப் பணிகளை செய்யுமாறு மாநகராட்சி பணிக்கிறது; வேண்டுகிறது. நகரில் உள்ள 55 பூங்காக்களை பராமரிக்க எடுத்துக் கொள்ள கோரி 8 பூங்காக்களை எடுத்துக் கொள்ள மட்டுமே தனியார் நிறுவனங்கள் முன் வந்திருக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

தனியார் தொழில் நிறுவனங்களோ, தன்னார்வ சேவை நிறுவனங்களோ கை வைக்காத வெறிநாய் பிடிப்பது, தெரு மாடுகளைப் பிடிப்பது, கையால் மலமள்ளுவது - கழிப்பறை சுத்தம் செய்வது (இதில் 16, 963 குடும்பங்கள் ஈடுபடுகின்றன), கழிவுநீர் அகற்றுதல் போன்ற பிற சேவைப் பணிகள்தான் இன்னமும் மாநகராட்சி கைகளில் உள்ளன. இதில் நாய் - மாடு பிடிப்பது போன்ற பணிகளோ எப்பொழுதாவது வருமான நோக்கில்தான் செய்யப்படுகின்றன. கழிவு நீர் அகற்றுதலில் அதை சுத்திகரித்து ஆலைகளுக்கு வழங்குவது போக எஞ்சிய பெரும்பகுதியை மாநகராட்சி வெறுமனே, நிலத்தில் ஆற்றில், கடலில் கொட்டுகிறது. பங்கிங்காம் கால்வாய், மாநகராட்சியின் கழிவு நீர் நீரேற்று நிலையங்களால்தான் 81% பாழானதாக "எக்ஸ்னோரா" அமைப்பே தெரிவிக்கிறது. இதிலும் மருந்தடிக்கும் பணி, தூய்மைப்படுத்தும் திட்டம் என தனியாருக்கு விட்டு கொள்ளையடிப்பதுதான் நடக்கிறது.

பாலங்கள், தெரு விளக்குகள், குழாய் இணைப்புகள், சாலைகள், மாநகராட்சி கட்டிடங்கள், சாலையோர மேடைகள் பழுதடைந்தால் சரி செய்து பராமரிக்கிற பணியையும், குடிநீர் வழங்கல் போன்றவைகளை கண்காணித்து பராமரிக்கிற பணியையும் தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைத்து விட்டதால் அவை மாநகராட்சியிடம் நிதி பெறுவதோடு தனியே சம்பந்தப்பட்ட மக்களிடமும் நிதி வசூலித்துக் கொள்ள அனுமதிக்கப்படுகின்றன.

சென்னையில் குடிநீர் வழங்கலில் தனியார் கொள்ளை பற்றி சொல்லத் தேவையில்லை. சாலையோர மேடைகளைப் பராமரிக்க ஆகும் செலவை அந்தந்த பகுதியிலுள்ள சாலையோர கடைகளிடம், நிறுவனங்களிடம் வசூலித்துக் கொள்ள அனுமதிக்க இருக்கிறார்கள். கொச்சியில் இது அனுமதிக்கப்பட்டு விட்டது. இனி மாநகராட்சி கொடுக்கும் நிதி போதவில்லை என்று கூறி பாலத்தைப் பராமரிப்பவர்கள், கடக்கும் வாகனங்களிடம் கட்டணம் வாங்கவும் செய்வார்கள். இது மட்டுமல்ல, நகராட்சிக்கு எதிராக வேலை நிறுத்தம் செய்து கிடப்பில் போட்டும் நிர்பந்தம் கொடுப்பார்கள். ராஜ்காட்டில் குப்பை அகற்றும் தனியார் கம்பெனி அண்மையில் வேலை நிறுத்தம் செய்த போது அவ்வேலையையும் நகராட்சி தொழிலாளர்கள் தோளில்தான் சுமத்தினார்கள்.

மக்களிடம் ஏராளமான வரிகள் மூலமும் அதை வருடந்தோறும் கூட்டுவதன் மூலமும், தனியாருக்கு விட்டு கொள்ளையடிப்பது மூலமும் மாநகராட்சி பெறும் வருமானம் கணிசமான அளவிற்கு அதிகார வர்க்கத்திற்கே விரயமாகிறது. ஆனால் தொழிலாளர்கள் மீது பழி போடுவதுதான் நடக்கிறது. தனியாருக்கு விடாமல் மேற்கண்ட பணிகளை நகராட்சியே செய்தால் புதிய தொழிலாளர்களுக்கு ஊதியம், பஞ்சப்படி இதர சலுகைகள் கொடுக்க வேண்டி வந்து அதிகம் செலவாகிறது என்கிறார்கள். தனியாருக்கு விட்டதன் மூலம் பம்பாய் மாநகராட்சி 43% செலவை மிச்சப்படுத்தியுள்ளதாம். சென்னை மாநகராட்சி மொத்த செலவில் 40 சதவிகிதம் சேமிக்கிறதாம். இப்படி அதிகாரவர்க்கம் கணக்கு காட்டுகிறது.

"தனியார் நிறுவனங்களின் பணியைப் பார்த்து நகராட்சி ஊழியர்கள், தொழிலாளர்களும் போட்டியில் தமது பணியின் தரத்தை கூட்டுகிறார்கள்" என்று புளுகுகிறார்கள் அதிகாரிகள். சென்னை மாநகராட்சி ஆணையாளர் அண்மையில் பணிக்கு குறித்த நேரத்திற்கு வந்து போகும் தொழிலாளர்களுக்கு "காபி" வழங்கப்படும் என ஒரு திட்டத்தை அறிவித்தார். இதைச் சுட்டிக்காட்டி "தொழிலாளர்கள் வேலையே செய்வதில்லை; பிறகு எப்படி நகராட்சி பணிகளை செவ்வனே செய்யும்; தனியாருக்கு விட வேண்டிய நிலையைத்தான் உருவாக்குகிறார்கள்" என்று நியாயப்படுத்துகிறது அதிகாரவர்க்கம். அதிகாரிகள் வேலை செய்யும் லட்சணத்தை நாமெல்லாம் மறந்து விடுவோம் என்ற அபார நம்பிக்கை அவர்களுக்கு. இது வல்லாமல் தனியாருக்கு விட்டுவிடுவதால் தொழிற்சங்கம் மற்றும் நிர்வாகத்தினருக்கிடையேயான மோதல் தவிர்க்கப்படுகிறது; ஊழியர்கள், தொழிலாளர்கள் லஞ்சம் வாங்குவது போன்ற முறையீடுகள் இல்லை என்றும் திமிரோடு பேசுகிறார்கள்.

உண்மையில் இவர்களது வாதமெல்லாம் நகராட்சியை வெறும் நிர்வாக - நிதி விவகாரங்களை கவனிக்கும் ஒரு உறுப்பாக மாற்றி தனியார் கம்பெனிகளுடன் கூட்டுச் சேர்ந்து அதிகார வர்க்கம் கொள்ளையடிக்க வழி கோருவதுதான். இதன் மூலம் நகராட்சிக்கு பல முனைகளில் வரி கொடுத்தும் தனியாருக்கு கட்டணம் கொடுத்தும் சாதாரண மக்கள் அவதிப்படுவதுதான் நடக்கும்.

தாராளமயக் கொள்கையின் விளைவு, நகராட்சியின் சாதாரண சேவைப் பணிகள் வரை வந்து மக்களை வாழவே முடியாத படுகுழியில் தள்ளுகிறது. ஆளும் காங்கிரசு கும்பல், மேலும் மேலும் அந்நியனிடம் கடனை வாங்கி நாட்டை மறுகாலனி நோக்கித் தள்ளுகிறது. இந்த நூற்றாண்டிற்குள் நாட்டிலுள்ள நகராட்சிகளின் பணிகளை மேம்படுத்த 39000 கோடி ரூபாய் தேவைப்படுகிறது என அறிவித்துள்ள மத்திய அரசு, உலக வங்கியிடம் கையேந்தி நிற்கிறது.



குப்பை அகற்றுவதும் தனியாருக்கு! துப்புரவு தொழிலாளர்கள் வேலைக்கு ஆபத்து.

டில்லி நகராட்சி மருத்துவ மனைகளின் குப்பைகளையும் நச்சுக் கழிவுகளையும் அகற்றாமல் இருப்பதற்கு எதிராக ஒருவர் தொடுத்த வழக்கிற்கு உச்சநீதிமன்றம் அண்மையில் தீர்ப்பு வழங்கியுள்ளது. டில்லி நிர்வாகம், "ஒன்று கழிவுகளை சுத்தம் செய்ய வேண்டும் அல்லது தனியாருக்கு விடவேண்டும்" என தீர்ப்பு கூறி கீழ்நீதிமன்றங்களுக்கும் வழிகாட்டியுள்ளது.

ஆக நகராட்சியை வெறும் வரி வாங்கும் அமைப்பாக மாற்றுவது முடிவாகிவிட்டது. நகரங்கள் தொடங்கி கிராமங்கள் வரையும் நடக்கும் அரசு சேவைப் பணிகளை விரைவில் முடக்கி தனியாரிடம் கொடுக்கப் போகிறார்கள். அரசு எந்திரம் இப்படி தனிமைபட்டு மக்களுக்கு வேண்டாத சதைப்பிண்டமாகி விட்டது. இனி அதற்கு கொடுக்கும் வரிகளை மறுத்து அதன் மூச்சை நிறுத்துவது மட்டுமே எஞ்சியுள்ளது.

● மாதவன்



படிப்பகம்

## அன்று சாஸ்நலா; இன்று தன்பாத் தொடரும் நிலக்கரிச் சுரங்க விபத்துகள்

கடந்த செப்டம்பர் 26-ம் தேதியன்று பீகார் மாநிலத்தின் தன்பாத்திலுள்ள கஸ்லிதந்த் நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 75 தொழிலாளர்கள் மாண்டு போயுள்ளனர். அவசரநிலைப் பாசிச ஆட்சியின்போது நடந்த சாஸ்நலா சுரங்க விபத்துக்கு அடுத்து நடந்துள்ள மிகப் பெரிய கோரமான விபத்து இதுதான்.

பாரத நிலக்கரி நிறுவனத்தைச் சேர்ந்த இச்சுரங்கத்தின் அருகே பாயும் கத்ரி ஆற்றில் பெருமழை காரணமாக வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இதன் காரணமாக, தன்பாத்திலுள்ள உள் சுரங்கங்களில் 450 அடிக்கு மேல் வெள்ளம் உயர்ந்து விட்டது. இதுபற்றி தொழிலாளர் எச்சரித்த போதிலும் அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்காமல், தொழிலாளர்களைக் கட்டாயப்படுத்தி பணிக்கு அனுப்பியுள்ளனர். செப். 26 அன்று நள்ளிரவில் ஏற்பட்ட மின்தடை காரணமாக தண்ணீரை வெளியேற்றும் பம்புகளும் இயங்கவில்லை. இதனால் வெள்ளம் மேலும் உயர்ந்து சுரங்கத்தினுள் சென்று 75 தொழிலாளர்களும் நீரில் மூழ்கி அநியாயமாக மாண்டு போயுள்ளனர்.



உறவினர்களைப் பறிகொடுத்த வேதனையில் சுரங்கத் தொழிலாளர் குடும்பங்கள்

விபத்து நடந்ததும் சுரங்கத்தினுள் சிக்கிய தொழிலாளர்களை மீட்க, இரண்டு நாட்களாகியும் நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை, அவசர மீட்புப்பணிக்கான சாதனங்கள் எதுவும் நிர்வாகத்திடம் இல்லை. உள்ளே சிக்கிக் கொண்ட தொழிலாளர்களைப் பற்றி அவர்களது குடும்பத்தாருக்கூட நிர்வாகம் தகவல் தரவில்லை. ஏறத்தாழ ஒரு மாதம் ஆகிய போதிலும் இன்னமும் இறந்த தொழிலாளர்களின் சடலங்கள் மீட்கப் படவில்லை. அந்த அளவுக்கு இந்தியாவில் மனித உயிர் மலிவாகிப் போய்விட்டது.

பாதுகாப்பற்ற சூழ்நிலையும், அரசு அதிகாரிகளின் அலட்சியமுமே இக்கோரமான விபத்துக்குக் காரணம். ஒவ்வொரு ஆண்டும் பீகார், மே. வங்க நிலக்கரிச் சுரங்கங்களில் 100-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தீயிலும் வெள்ளத்திலும் சிக்கி மாண்டு போவதும், 500-க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து முடமாவதும் தொடர்கிறது. உரிய பாதுகாப்புச் சாதனங்கள் இல்லாமல் தொழிலாளர்களை மரணக் குழியினுள் தள்ளி காவு கொண்ட அரசுதான் முதல் கிரிமினல் குற்றவாளி என்பதையே இக்கோர விபத்து மீண்டும் நிரூபித்துக் காட்டுகிறது.

## பாசிச ஜெயாவுக்குப் பரிந்து நிற்கும் பாசு

தனது ஊழல் - ஒடுக்குமுறை பாசிச ஆட்சியால் அம்பலப்பட்டுப் போயுள்ள ஜெயா கும்பலுக்குப் பரிந்து பேசக் கிளம்பியுள்ளார், மே.வங்க 'மார்க்சிஸ்டு' முதல்வர் ஜோதிபாசு. ''ஆயிரம்தான் ஊழல் என்றாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜெயா ஆட்சியை கலைக்கக் கூடாது'' என்று அவர் சென்னையில் பேட்டியளித்துள்ளார். ஜெயலலிதா மீது வழக்குத் தொடர சுப்பிரமணியசாமிக்கு கவர்னர் அனுமதி அளித்ததும், அ.தி.மு.க. எம்.பி.க்கள் இருவர் தன்னை சந்தித்ததாகவும், மே.வங்க ''அட்டர்னி ஜெனரலுடன்''தான் இதுபற்றி பேசி, தமிழக ''அட்டர்னி ஜெனரலு''டன் கலந்தாலோசிக்குமாறு கூறியதாகவும் ஜோதிபாசு பெருமையுடன் பேட்டியளித்துள்ளார். ''ஊழல் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநில முதல்வர் மீது வழக்குப்போட அனுமதியளிக்கும் விஷயத்தை உச்ச நீதிமன்றத்தின் பொறுப்பில் விட்டு விட வேண்டும்; ஊழல் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் கலைக்கக் கூடாது'' என்று ஜெயாவின் ஊழல் கொள்ளைக்கு வக்காலத்து வாங்கியுள்ளார்.

இதுதவிர, ''தேசிய முன்னணியில் அ.தி.மு.க.வை சேர்த்துக் கொள்வதில் 'மார்க்சிஸ்டு' கட்சிக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. காங்கிரசு, பாரதீய ஜனதா அல்லாத மதச்சார்பற்ற கட்சிகளை ஒருங்கிணைத்து மூன்றாவது மாற்று அணியை உருவாக்க முயற்சிக்கிறோம். வரப்போகும் பொதுத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காமல் போய், தொங்குநிலை நாடாளுமன்றம் ஏற்படும் அபாயம் உள்ளது. இந்த அச்சத்தைப் போக்கி நாடாளுமன்ற ஜனநாயகத் தக் காக்கும் பொருட்டு தேசிய முன்னணியும், 'இடது'சாரி முன்னணியும் இணைந்து இத்தகைய மாற்று அணியை உருவாக்க முயற்சிக்கிறோம்'' என்று பாசிச - பார்ப்பன ஜெயா கும்பலைப் பரிசுத்த மதச்சார்பற்ற சக்தியாகக் காட்டி மாய்மாலம் செய்யக் கிளம்பிவிட்டார் ஜோதிபாசு.

தேசிய முன்னணியில் அ.தி.மு.க. சேர வேண்டுமானால், தமிழகத்தில் 'மார்க்சிஸ்ட்' கட்சி தனது நிலையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று ஜெயலலிதா நிபந்தனை விதித்திருந்தார். இந்தப் பின்னணியில்தான் இப்போது 'மார்க்சிஸ்டு' தலைவர்கள் தமது சந்தர்ப்பவாத நிலைப்பாட்டை அவிழ்த்து விட்டுள்ளனர். தேசிய முன்னணியில் மதச்சார்பற்ற கட்சிகளை ஒருங்கிணைப்பதுதான் 'மார்க்சிஸ்டு'களின் நோக்கம் என்றால், தி.மு.க.வை சேர்க்க முயற்சிக்காதது ஏன்? ஜெயா கும்பல் மீது மட்டும் இவ்வளவு அக்கறை ஏன்? என்பதை யோசித்தாலே போலிக் கம்யூனிஸ்டுகளின் சந்தர்ப்பவாத சதிராட்டம் புரிந்துவிடும்.

## ''சாராயம் குடிப்பது தவறல்ல!'' 'மார்க்சிஸ்டு' அமைச்சரின் உளறல்

தனது பேரனுக்கு வருணாசிரம - பார்ப்பன முறைப்படி பூணூல் மாட்டும் விழா நடத்திய



படிப்பகம்

மே.வங்க 'மார்க்சிஸ்டு' அமைச்சரான சோம்நாத் சட்டர்ஜி, இப்போது கம்யூனிஸ்டுகள் சாராயம் குடிப்பது தவறல்ல என்று உளறத் தொடங்கியிருக்கிறார்.

கடந்த ஜூலை - ஆகஸ்டு மாதங்களில் இவர் இரண்டு ஆடம்பர விருந்துகளை நடத்தினார். மே.வங்க முதல்வர் ஜோதிபாசு, மேலை நாடுகளுக்குச் சென்று அந்நிய முதலீடுகளுக்கு ஏற்பாடு செய்து விட்டு வெற்றிகரமாகத் திரும்பியதைப் பாராட்டி இந்த விருந்துகள் நடந்துள்ளன. தரகுப் பெருமுதலாளிகளும் அதிகாரிகளுமாக ஏறத்தாழ 20 பேர் மட்டுமே கலந்து கொண்ட இந்த விருந்துகளில் ஆட்டுக்கால் சூப்பு, தேங்காய்ப்பால் ஊற்றிய கோழிக்கறி, நெய்யில் வறுத்த மீன், சிங்கப்பூர் நூடுல்ஸ், ஸ்காட்ச் விஸ்கி முதலானவை தாராளமாகப் பரிமாறப்பட்டன. இதற்கான செலவு மட்டும் ரூ. 39,265. மே.வங்கத் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலையில் இந்த செலவுகள் எழுதப்பட்டன. இதில் வேடிக்கை என்னவென்றால், இந்த விருந்துகளில் முதல்வர் ஜோதிபாசு பிற வேலைகள் காரணமாக பங்கேற்கவில்லை. ஆனாலும் அவர் பெயரைச் சொல்லி இந்தக் குடியும் கும்மாளமும் விருந்தும் நடந்துள்ளது.



மக்களது வரிப்பணத்திலே நடந்த இந்த ஊதாரித்தனமான விருந்துகளைப் பற்றி சில பத்திரிகைகளில் செய்தி வெளியானதும், "நான் என்ன தப்பு செய்து விட்டேன்? கம்யூனிஸ்டுகள் சீமைச்சாராயம் குடிப்பது தவறா?" என்று இந்தக் கழிசடை எகிறிக் குதித்துள்ளார்.

ஏற்கனவே இவர், போபர்ஸ் பீரங்கி பேரக் கொள்ளையில் சம்பந்தப்பட்ட ஆயுத பேரத் தரகு முதலாளிகளான இந்துஜாக்களுடன் இலண்டனிலுள்ள தேம்ஸ் நதியில் உல்லாசப் படகு சவாரி போனவர்தான்! முதலாளிகளுடன் சேர்ந்து உல்லாசப் பணயம் செய்வது தவறல்ல என்று வெட்கமின்றி நியாயப்படுத்தியவர்தான் இவர்! "டாட்டா - பிர்லா கூட்டாளி; பாட்டாளிக்குப் பகையாளி!" என்று கோஷம் போட்ட 'மார்க்சிஸ்டுகள்', இப்போது வெளிப்படையாகவே 'தரகு முதலாளிகளே எங்கள் கூட்டாளி; ஏகாதிபத்தியங்களே எங்கள் தோழர்கள்!' என்று உல்லாச விருந்தும் குடியும் கூத்தும் கும்மாளமும் போடக் கிளம்பிவிட்டதோடு, கம்யூனிச ஒழுக்க நெறியையும் காற்றில் பறக்கவிட்டு விட்டார்கள். நல்ல முன்னேற்றம்தான்!

துரோக ஒப்பந்தத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தும் பாலஸ்தீனியர் மீது இனவெறி அடக்குமுறை

## துரோக ஒப்பந்தத்தால் விடுதலை உணர்வு அடங்கிவிடுமா?

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்துக்குமிடையே கடந்த செப். 28-ந் தேதியன்று இரண்டாவது கட்ட அமைதி ஒப்பந்தம் கையெழுத்தானதைத் தொடர்ந்து, பாலஸ்தீனிய மக்கள் இத்துரோக ஒப்பந்தத்தை எதிர்த்துப் போராட்டத்தைத் தொடர்ந்து வருகிறார்கள். அமெரிக்க அதிபர் முன்னிலையில் கையெழுத்தான தற்போதைய ஒப்பந்தப்படி, இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின் கீழுள்ள மேலைக்கரை பிராந்தியத்தின் ஏழு நகரங்கள் மற்றும் 400 கிராமங்களிலிருந்து இஸ்ரேலிய துருப்புகள் வெளியேறும். அதேசமயம் ஹெப்ரான் நகரில் குடியேறியுள்ள 400 இஸ்ரேலியரைப் பாதுகாக்க அங்கு இஸ்ரேலிய ராணுவம் தொடர்ந்து நீடிக்கும். ஹெப்ரானையும் லெபனான் நாட்டையும் இணைக்கும் பாலம் இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் இருக்கும். அதாவது, பாலஸ்தீனியருக்கு சுயாட்சி உரிமை அளிக்கும் இந்த ஒப்பந்தத்தினால் மேலைக்கரை பிராந்தியத்தில் 30% அளவுக்கே பாலஸ்தீனியர்கள் தமது அதிகாரத்தைச் செயல்படுத்த முடியும். கடைசியில் சுயாட்சி உரிமை என்பது ஊராட்சி மன்றம் அளவுக்குச் சுருங்கிப் போய்விட்டது.

இதுவொருபுறமிருக்க, கடந்த ஆண்டில் ஏற்பட்ட முதல் கட்ட ஒப்பந்தம் இன்று கழிப்பறைக் காகிதமாகிவிட்டது. காசா முனை, ஜெரிகோ பிராந்தியங்களிலிருந்து இஸ்ரேலியப் படைகள் வெளியேறவில்லை. இப்பிராந்தியங்களில் பாலஸ்தீனியர்கள் சுயாட்சி நிர்வாகம் செய்ய உரிய நிதி ஒதுக்கீடும் தரப்படவில்லை. இதை எதிர்த்துப் போராடிய பாலஸ்தீனியர்களை நரவேட்டையாடியும், முன்னணித் தலைவர்களை ரகசியமாகச் சுட்டுக் கொன்றும் இஸ்ரேலிய இனவெறி இராணுவம் வெறியாட்டம் போட்டது. "இண்டிபதா" எழுச்சியின் போது கைதாகி சிறையில் வாடும் 10,000-க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்களை ஒப்பந்தப்படி விடுதலை செய்ய மறுத்து, புதிய நிபந்தனைகளை விதிக்கிறது.

இத்தனைக்கும் பிறகும், பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர்கள் இஸ்ரேலுடன் சமரசப் பேச்சு வார்த்தைக்கு ஓடுகின்றனர். தலைவர்களின் துரோகமும், அமைதி என்ற பெயரிலான மாய்மாலங்களும் பாலஸ்தீனியர்களிடம் மேலும் அம்பலப்பட்டுப் போயுள்ளது.

## போபாலைக் கவ்விய நச்சுக் கழிவு பயங்கரம்

பதினொரு ஆண்டுகளுக்கு முன்பு மத்தியப் பிரதேச மாநிலத் தலைநகரான போபாலில் நடந்த விஷ வாயுப் படுகொலைகள், நாட்டு மக்களின் நெஞ்சில் ஆறாத ரணமாக இருக்கும் போதே போபாலில் மீண்டும் ஒரு பேரழிவுக்கான அபாயம் காத்திருக்கிறது. இம்முறை இப்பேராபாயம் நச்சு உலோகக் கழிவுகள் மூலம் உருவாகியுள்ளது.

ஜெர்மன், டச்சு நாடுகளில் பெருமளவில் குவிந்துவிட்ட நச்சுத்தன்மை வாய்ந்த துத்தநாகக் கழிவுகள் போபாலில் உள்ள பாரத துத்தநாக நிறுவனத்தில் கொண்டு வந்து கொட்டப்பட்டுள்ளன. கடந்த



படிப்பகம்

www.padippakam.com

ஜூலை மாதத்திலிருந்து இதுவரை 2400 டன் அளவுக்கு இந்நச்சுக் கழிவுகள் கொட்டப்பட்டுள்ளதாக பசுமை அமைதி இயக்கம் எனும் சுற்றுச்சூழல் அமைப்பினர் உறுதிப்படுத்துகின்றனர். துத்தநாகத் தகடு உற்பத்தியின் போது ஏற்படும் இக்கழிவுகளில் காரீயம், செம்பு முதலான நச்சு உலோகங்கள் பெருமளவில் உள்ளன. இவை இரத்தக் குழாய்களையும் நரம்பு மண்டலத்தையும் பெரிதும் பாதிக்கக் கூடியவை. இக்கழிவுகள் திறந்த வெளியில் மலைபோல் போபாலில் குவிக்கப்பட்டுள்ளன. இதனால் நிலமும், நிலத்தடி நீரும் வெகுவிரைவில் நஞ்சாகிப்போகும்.

இதைவிடக் கொடுமை என்னவென்றால், இக்கழிவுகளைக் கூலிவேலை செய்யும் பெண்கள் வெற்றுக் கை - கால்களுடன் கூடையில் அள்ளிச்சென்று ஆலையில் கொண்டு போய் கொட்டுகிறார்கள். இதனால் இத்தொழிலாளர்கள் வெகுவிரைவில் பாதிக்கப்பட்டு முடமாகிப் போவார்கள். இதோடு, அண்மையில் ஏற்பட்ட பெருமழை காரணமாக இக்கழிவுகளின் ஊடே பாய்ந்த நீரானது ஆலையைச் சுற்றியுள்ள ஆறு, குளங்களையும் நஞ்சாக்கியுள்ளது. இதனால், இந்நச்சு நீரைக்குடித்த கால்நடைகள் இனம் புரியாத நோயினால் மெல்ல மெல்ல மடிந்து வருகின்றன.

இந்த உண்மைகள் அம்பலமான பிறகும் கூட, இக்கழிவுகளிலிருந்து மறுசுழற்சி மூலம் துத்தநாக உலோகத்தைப் பிரித்தெடுப்பதாகப் பாரத துத்தநாக நிறுவனம் மாய்மாலம் செய்து வருகிறது. ஆனால், ஒரு கிலோ கழிவுகளிலிருந்து அரை கிலோ அளவுக்குத்தான் துத்தநாகம் கிடைக்கும். அதேசமயம் நூறு மடங்குக்கும் மேலாக சுற்றுச்சூழல் நஞ்சாகும் என்று பசுமை அமைதி இயக்கத்தினர் குற்றம் சாட்டுகின்றனர். நச்சுக் கழிவுகளை ஏற்றுமதி செய்வதை சுற்றுச்சூழல் மாநாட்டுத் தீர்மானங்கள் ஏற்கனவே தடை செய்துள்ளன.

ஆனால், மக்கள் விரோத ராவ் அரசோ, நாட்டு மக்களைப் பலியிட்டு ஏகாதிபத்தியங்களுக்கு விசுவாச சேவகம் செய்து வருகிறது.

## ஈழம்: நடப்பது யுத்தமல்ல அப்பட்டமான இனப்படுகொலை

ஈழத்தில் சிங்கள இனவெறி இராணுவத்தின் முப்படைகளும் சேர்ந்து நடத்தும் ''சூரிய ஒளி'' தாக்குதல் நடவடிக்கையால் யாழ் மாகாணமே மயான பூமியாக மாறி வருகிறது. போர் நெறிமுறைகளை சற்றும் மதிக்காமல் பள்ளிகள், மருத்துவமனைகள், குடியிருப்புப் பகுதிகள் மீது சிங்கள ராணுவம் நடத்தி வரும் குண்டு வீச்சுத் தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்ட பச்சிளம் குழந்தைகள் கோரமாகக் கொல்லப்பட்டுள்ளார்கள். யாழ் மக்களுக்கு உணவு அனுப்பி வந்த கப்பல் போக்குவரத்தையும் சிங்கள அரசு நிறுத்திவிட்டு பட்டினி போட்டுக் கொன்று வருகிறது. செஞ்சிலுவைச் சங்கத்தையும் மருத்துவக் குழுக்களையும் புலிகளுக்குச் சார்பானவை என்று செயல்பட விடாமல் தடுக்கிறது. ஷெல் தாக்குதலுக்கு அஞ்சி யாழ்ப்பாணத்தை விட்டு தமிழ் மக்கள் தப்பியோடி, உள்நாட்டிலேயே அகதிகளாக அல்லற்படுகிறார்கள். நடப்பது புலிகளுக்கு எதிரான யுத்தமல்ல; அப்பட்டமான இனப் படுகொலைதான் என்பதை தொடரும் சிங்கள இனவெறி அட்டூழியங்கள் மெய்ப்பிக்கின்றன.

சிங்கள ராணுவத்தின் முப்படைத் தாக்குதலால் பெருத்த இழப்புகளையும் பின்னடைவையும் சந்தித்த போதிலும், அக். 20-ந் தேதியன்று புலிகள் கொழும்பு நகருக்கு அருகே விமான எரிபொருள் கிடங்குகள் இரண்டின் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தி சேதப்படுத்தினர். இதனால் ஆத்திரமடைந்த சிங்கள ராணுவம் 35000-க்கும் மேற்பட்ட துருப்புகளைக் குவித்து யாழ்ப்பாணத்தை 10 நாட்களில் கைப்பற்றுவோம் என்று கொக்கரிக்கிறது. மறுபுறம் இந்திய அரசோ சந்திரிகா அரசுக்குத் திரைமறைவில் உதவி செய்து வருவது போதாதென்று தமிழகத்தில் புலி ஆதரவு - ஈழ விடுதலை ஆதரவு குழுக்கள் - கட்சிகளின் செயல்பாடுகளைக் கண்காணித்து, கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பாசிச ஜெயா கும்பலுக்கு உத்திரவிட்டுள்ளது.



சிங்கள ராணுவத்தின் குண்டு வீச்சில் பலியான ஈழத் தமிழ்க் குழந்தைகள்

தற்போதைய ஈழப்போர் தமிழர்களிடம் மட்டுமல்ல; சிங்கள மக்களிடையேயும் வெறுப்பையும் அதிருப்தியையும் தோற்றுவித்துள்ளது. இலங்கையின் மனித உரிமை அமைப்புகளும், சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் போரை உடனடியாக நிறுத்துமாறு சந்திரிகா அரசைக் கோருகின்றனர்.

''இனப் படுகொலைப் போரை உடனே நிறுத்து! ஈழத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி!'' என்ற முழக்கத்துடன் தமிழக மக்கள் ஈழ விடுதலைப் போருக்கு ஆதரவாகத் துணிவுடன் குரலெழுப்ப வேண்டும். சிங்கள இனவெறிப் படையின் அத்துமீறிய தாக்குதல்களால் ஆத்திரமடைந்த புலிகள் கிழக்கு மாகாணத்தில் அப்பாவி சிங்கள சிவிலியன்கள் மீது தாக்குதல் நடத்தி 70 பேரைக் கொன்றொழித்துள்ளனர். இத்தகைய பழிவாங்கும் இனவெறித் தாக்குதல்களால் ஈழ விடுதலை யுத்தம் பின்னடைவையே சந்திக்கும். சிங்கள இனவெறியர்களுக்கே சாதகமாக முடியும்.

விடுதலைப் போரில் உறுதியாக நிற்கும் ஈழ மக்கள், ஈழத் துரோகிகளை மட்டுமல்ல; பாசிசப் புலிகளின் இத்தகைய இனவெறிப் பயங்கரவாத நடவடிக்கைகளையும் அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும்.


படிப்பகம்

# கேள்வி பதில்



● "ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள பொதுவான நிலை கல்வி நிறுவனங்களில் எல்லாத் தேசிய இனத்தவரின் குழந்தைகளும் கலப்பதை உத்தரவாதம் செய்ய, நாம் கடும் முயற்சி செய்ய வேண்டும். எவ்வகையிலும் கல்வி விஷயங்களில் தேசிய இனங்களைப் பிரித்து வைப்பது நம்பணி அல்ல; மாறாக சரிசமமான உரிமைகளில் வாழ்வதற்கான அடிப்படையான ஜனநாயக நிலைமைகளை உருவாக்க நாம் கடும் முயற்சி செய்ய வேண்டும்" என்றார் லெனின் (லெ.தொ.நூ. 19-532). தமிழ் வழிக் கல்விக் கூடங்கள் நடத்தும் தியாகு போன்றவர்களின் பணியுடன் இதனைப் பொருத்தி, "தாய் மொழிப் பள்ளி தேவையற்றது" என முடிவெடுப்பது சரியா? தவறா? சரியெனில் மா-லெ புரட்சிகர அமைப்புகள் இதை ஏன் செய்யவில்லை?

நசீம், கோவை.

★ "தாய் மொழிப் பள்ளி தேவையற்றது" என்கிற முடிவுக்கு எந்தவொரு சூழ்நிலையிலும் எந்தவொரு காரணத்திற்கும் ஒரு புரட்சிகர அமைப்பு வரமுடியாது. பள்ளிப் படிப்புக்கு மட்டுமல்ல, மேல்நிலை ஆராய்ச்சிக்குக் கூடத் தாய் மொழிப் பயிற்சியே சிறந்ததும் அவசியமுமாகும். மிகமிக உயர்ந்தநிலை ஆராய்ச்சிக்கு, போதிய மொழியாக்கங்கள் கிடைக்காத நிலையில் குறிப்பிட்ட ஆராய்ச்சியாளர்கள் மட்டும் வேற்றுமொழிகளைக் கற்பதும் பயன்படுத்துவதும் ஏற்கக்கூடியதே. அதுவும் பள்ளி, கல்லூரிகளில் அனைவருக்குமான பயிற்று மொழியாக வைக்கத் தேவையில்லை. அந்த ஆராய்ச்சியாளர்களுக்கான சிறப்பு மொழிப் பாடமாக இருந்தாலே போதுமானதாகும். தமிழ் நாட்டில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் மழலையர் பள்ளி முதல் கல்லூரிகள் - ஆராய்ச்சிக் கூடங்கள் வரை அனைத்து மட்டங்களிலும் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்ட கல்விக்கூடங்களே புற்றீசல்களாய்ப் பல்கிப் பெருகி வருகின்றன. அவை அரசு ஆதரவும் ஊக்கமும் பெற்று, கொள்ளை இலாபத்துக்குரிய தொழிலாகவும் ஆகிவிட்டன; மாணவர்கள் - பெற்றோர்களுக்கு அவற்றின் மீது அதீதமோகம் வளர்ந்துள்ளது என்பதெல்லாம் உண்மைதான். இந்த நிலைக்கு இன்றைய அரசுதான் பெரிதும் பொறுப்பாகும். ஆனால் அதேசமயம் இப்போது தொழில் கல்வியில்தான் தாய்மொழி - தமிழ்வழிப் பயிற்சிக்கு வாய்ப்பில்லையே தவிர பள்ளி - கல்லூரிகளில் அதற்கு வாய்ப்பில்லை, தடை இருக்கிறது என்பது சரியல்ல. மாணவர்கள் - பெற்றோர்களாக மோகங் கொண்டு ஆங்கிலப் பயிற்றுமொழிக் கல்வியைத் தெரிவு செய்து கொள்கிறார்கள்; தாய்மொழிக் கல்விக்கு அரசு போதிய ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதில்லை, புறக்கணிக்கிறது; தாய்மொழிக் கல்வி பயின்றவர்களுக்கு வேலை வாய்ப்பு மறுக்கப்படுகிறது; அண்டை மாநிலங்களில் செய்வதைப் போல தாய்மொழிக் கல்வி கட்டாயமாக்கப்பட்டு, மாநில மொழி கற்றவர்களுக்கே வேலை வாய்ப்பு என்றாக்கவேண்டும் - இவைதான் குறைபாடும் கோரிக்கையும் என்றால் இவற்றுக்கான தீர்வு அரசியல், பண்பாட்டுத்தளத்திலான போராட்டம் தானே தவிர தியாகுவும் அவரது கூட்டாளிகளும் தமிழ்வழிக் கல்விக் கூடம் நடத்துவது "அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பது"தான். பாலவாடிகளில் இருந்து பள்ளி - கல்லூரிகள் வரை ஏற்கனவே அரசு கல்விக் கூடங்களிலேயே தாய் மொழியில் பயில வாய்ப்பிருக்கிறது; அப்படி இல்லையென்றால் அதற்கான ஏற்பாடு செய்து தரும்படி அரசுக்கெதிராகப் போராட வேண்டுமே தவிர அரசு செய்யத் தவறும் - செய்ய மறுக்கும் பணிகளுக்கெல்லாம் மாற்று ஏற்பாடு செய்து கொள்வது என்று போனால் புரட்சி இயக்கத்தின் பணிகள் எங்கே போய் முடியும்? மடங்களும் ஆசிரமங்களும் நடத்துவதில் தான். "இருக்கும் அமைப்புக்குள் குறைந்தபட்சம் - சாத்தியமான நிவாரணம் காண்பது" என்ற சி.பி.ஐ., சி.பி.ஐ.(எம்) கட்சிகளைப் போலிக் கம்யூனிஸ்டுகள் என்று சொல்லிக் கொண்டிருக்கும் இந்த மண்ணுக்கேற்ற மார்க்சியர்களின் புரட்சியே இப்படி எந்தவிதப் பாதிப்பும் இல்லாத நுண்களப் பணிகள்தாம்! இது, அழித்தொழிப்பு அதிரடிப் புரட்சியில் இருந்து வாயடிப் புரட்சிக்குப் போன பரிணாம வளர்ச்சி. இந்தச் சரிவை நியாயப்படுத்துவதற்காக அவர்கள் தெரிந்தெடுத்துக் கொண்டதுதான் இனப் பிரச்சினையில் தேசிய முதலாளிகளின் நிலைப்பாடு. தேசிய இனப் பிரச்சனையில் தேசிய இனமுதலாளிகளின் நிலைப்பாடு - நடைமுறையிலிருந்து பாட்டாளி வர்க்கத்தினுடைய நிலைப்பாடும் நடைமுறையும் மாறுபாடானவை. இதில் முன்னவர்களின் இறுதி இலக்கு - இலட்சியம் எல்லாம் தேசிய இன நலன்களை அடிப்படையாகக் கொண்டவை தாம். ஆனால் பாட்டாளி வர்க்கம், தேசிய சுயநிர்ணய உரிமையைத் தனது புரட்சியின் ஒரு பகுதியாகக் கொண்டிருக்கும் அதே சமயம், பாட்டாளி வர்க்கத்தின் இறுதி இலக்கு - இலட்சியம் சர்வதேசிய நலன்களை அடிப்படையாகக் கொண்டது. கேள்வியாளர் எடுத்துக்காட்டும் மேற்கோளில் லெனின் வலியுறுத்துவது இந்த அடிப்படையில்தான். ஆனால் இங்கே சாதியவாதிகளாகவும், இனவாதிகளாகவும் சீரழிந்து போன போலிப் புரட்சியாளர்கள், மண்ணுக்கேற்ற மார்க்சியம் என்கிற பெயரில் தேசிய இன முதலாளிகளின் நிலைப்பாடுகளையே தமது இலட்சியமாகவும், வழிகாட்டியாகவும் கொண்டுள்ளனர். அதிலேயும் தேசிய இன முதலாளிக்குரிய முற்போக்கு அம்சங்களை வெறும் சவடாலுக்கானதாகவும், அவர்களின் பிற்போக்கு அம்சங்களை நடைமுறைக்கானதாகவும் வைத்துள்ளனர்.

ஏகாதிபத்தியக் கைக்கூலிகளாகச் செயல்படும்
தன்னார்வக் குழுக்களின் சதிகள்,
துரோகங்களைத் தோலுரிக்கும் புதிய வெளியீடு

வஞ்சக வலை விரிக்கும்
தன்னார்வக் குழுக்கள்

விலை : ரூ. 6/-

பிரதிகளுக்கு:

கீழைக்காற்று வெளியீட்டகம்,
10, அவுலியா சாகிபு சந்து,
எல்லீசு சாலை, சென்னை - 600 002.

www.padippakam.com

# புதிய பொருளாதாரம் : வீக்கமா? வளர்ச்சியா?

**காங். கும்பல் குறிப்பிடுகிற வளர்ச்சி தொடர்ச்சியில்லாதவை. உண்மையில் உள்நாட்டு - வெளிநாட்டு கடன்களும், மக்களின் வறுமையும் தான் தொடர்ச்சியான வளர்ச்சியிலுள்ளன.**

இந்தியப் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறதா? அல்லது முடமாகி முடங்கிப் போய்க் கிடக்கிறதா? - இந்தக் கேள்விக்கு நிதி அமைச்சர் மன்மோகன் சிங், ''உணவுக் கிடங்குகளில் தேவைக்கும் அதிகமாகவே உணவுப் பொருட்கள் சேமிக்கப்பட்டுள்ளன; அந்நிய செலாவணி கையிருப்பு 2,000 கோடி அமெரிக்க டாலர் - அதாவது 60,000 கோடி ரூபாயைத் தொட்டுள்ளது; நிதிப் பற்றாக்குறைகளைச் சமாளித்து, பண வீக்கத்தை ஏழு சதவீதத்துக்குள் கட்டுப்படுத்திவிடலாம்; நாட்டின் மொத்த உற்பத்தி நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டைத் தாண்டிவிடும் அளவு, தொழில் மற்றும் விவசாய உற்பத்தி கணிசமாக அதிகரித்துள்ளது'' என சமீபத்தில் பதில் கூறியுள்ளார். மன்மோகன் சிங்கின் இந்தப் பதில், நாட்டின் பெரும்பான்மையான மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் வண்ணம் பொருளாதாரம் வளர்ந்து கொண்டிருக்கிறது என்ற தோற்றத்தைத் தருகிறது. ஆனால் நடுத்தர மற்றும் ஏழை மக்களின் அன்றாட வாழ்நிலையோ இத்தோற்றத்துடன் முரண்பட்டே நிற்கிறது.

• பீகாரைச் சேர்ந்த பிரசாத் நடைபாதை காய்கறி கடை வியாபாரி; நாளொன்றுக்கு முப்பது ரூபாய் இவருக்கு வருமானமாகக் கிடைத்து வருகிறது. ''நான்கு வருடங்களுக்கு முன்னால் என்னால் ஓரளவு சேமிக்க முடிந்தது; ஆனால் இன்று விலைவாசி உயர்வு எனது வருமானம் முழுவதையும் தின்று தீர்த்து விடுகிறது. நியாய விலைக் கடைகளால் எந்தப் பலனும் இல்லை'' என்கிறார் இவர்.

• ரஹ்மான் - அரசு ஊழியர்; இவரது மாதச் சம்பளம் ஐயாயிரம் ரூபாய். ''வீட்டுச் செலவுகள் முன்னைவிட 30 சதவீதம் அதிகரித்திருப்பதாகவும், பொருளாதாரச் சீர்திருத்தங்கள் தனது வாழ்கைத் தரத்தில் எந்தவித மாற்றத்தையும் கொண்டு வந்துவிடவில்லை'' என்கிறார் இவர்.

• தினசரி பத்திரிகை விற்பனை செய்யும் நவாஸும், வீடுகளில் வேலை செய்து வாழ்க்கை நடத்தும் சுசீலாவும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் ஏறிவருவதையும், நியாய விலைக் கடைகளால் எந்தப் பயனும் இல்லாததையும் சுட்டிக் காட்டுகிறார்கள்.

உணவு தானிய உற்பத்தி பெருகி, தானியக் கையிருப்பும் அதிகரித்திருக்கிறது. ஆனால் நியாய விலைக் கடைகளில் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் ஒழுங்காகக் கிடைப்பதில்லை; பணவீக்கம் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும் என ஆருடம் கூறுகிறார்கள். ஆனால் அரிசி, பருப்பு, பால், காய்கறிகளின் விலையோ கடந்த நான்கு வருடங்களுக்குள் விண்ணை முட்டும் வண்ணம் உயர்ந்து கொண்டே செல்லுகின்றன. இந்த முரண்பாட்டை வளர்ச்சி என்று எப்படிக் கூறுவது? தாராளமயமாக்கலை விமர்சிப்போர் மட்டுமல்ல, மைய அரசின் கீழுள்ள திட்டக் கமிஷன் -கூட இந்த 'வளர்ச்சி' பற்றித் தனது அதிருப்தியைத் தெரிவித்துள்ளது.

எட்டாவது ஐந்தாண்டு காலத் திட்டச் செயல்பாடுகள் குறித்த இடைக்கால ஆய்வறிக்கையொன்றைத் தேசிய

**காட்டுக் கிழங்குகளை உண்டு பசியாறும் பழங்குடி இனச் சிறுமி.**



வளர்ச்சி குழுவிற்கு அனுப்புவதற்காகத் தயாரித்தது, திட்டக் கமிஷன். தாராளமயமாக்கலின் மோசமான பின் விளைவுகள் பற்றி அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்ததால், ராவ் அரசு இதனைப் பகிரங்கமாக வெளியிடவிட அனுமதிக்கவில்லை. இவ்வறிக்கையில் கடந்த நான்காண்டுகளில், 1. மைய அரசின் சேமிப்பும் முதலீடும் குறைந்துள்ளன; 2. வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்துள்ளன; 3. அரசின் வருமானமும் முதலீட்டு உருவாக்கமும் கீழ் நோக்கி சரியத் தொடங்கியுள்ளன; 4. அரசின் கீழுள்ள உள்கட்டுமான மற்றும் பொதுத் துறை நிறுவனங்களும், பொது விநியோக அமைப்பு முறையும் மோசமடைந்து வருகின்றன, 5. கூடுதலான வட்டிக்கு அரசு கடன் வாங்குவது அதிகரித்துள்ளது'' என சாராம்சமாகச் சுட்டிக் காட்டப்படுள்ளது.

எளிமையாகச் சொன்னால், ''அரசு தனது வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முதலாளித்துவ நிறுவனங்களின் மீது விதிக்கப்படும் வரிகளைக் கூட்டவோ, புதிய தொழில்களில் முதலீடு செய்து தொடங்கவோ தயாராக இல்லை; மாறாக, பூதகரமாகி வரும் தனது செலவுகளை ஈடுகட்ட, சொத்துகளை - அதாவது பொதுத்துறை நிறுவனங்களின் கணிசமான பங்குகளைத் தனியாருக்கு விற்று வருகிறது; கூடுதல் வட்டிக்கு கடன் வாங்கிச் செலவுகளைச் சரிகட்ட முயற்சிக்கிறது. இப்படியானதொரு நிலையை 'வளர்ச்சி' எனக் கூற முடியுமா?

### புதை சேற்றினுள் வீழ்ந்தவன் காலூன்றி எழ முடியுமா?

தாராளமயமாக்கலை விமர்சிக்கும் பொருளாதார நிபுணர்கள், இவ்வளர்ச்சியை 80-களில் ஏற்பட்ட வளர்ச்சியுடன் ஒப்பிட்டுக் கூறுகிறார்கள். ''அன்று அந்நியக் கடன் இந்தியப் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்தியது; இன்று அந்நியக் கடனோடு உள்நாட்டுக் கடனும் பல்கிப் பெருகி, இவ்வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்துள்ளன. மேலும் இவ்வளர்ச்சி நீண்ட காலத்துக்குத் தாக்குப் பிடித்து நிற்காது என்பதோடு, இன்றைய பொருளாதார பிரச்சினைகளுக்கே காரணமாகவும் உள்ளது'' எனக் குறிப்பிடுகிறார்கள் அந்நிபுணர்கள். செப்டம்பர் மாதத் துவக்கத்தில் பொருளாதார பத்திரிகை ஆசிரியர்கள் கருத்தரங்கில் உரையாற்றிய நிதியமைச்சர், ''அரசின் அதிகரித்து வரும் நிதி மூலதனப் பற்றாக்குறையும் கட்டுக்குள் அடங்காமல் ஏறி இறங்கும் பண வீக்கமும்தான் இந்தியப் பொருளாதாரத்தின் பிரச்சினைகள்'' எனக் கூறியுள்ளார்.

மைய அரசின் நிதி மூலதனப் பற்றாக்குறை கடந்த 93 - 94-ஆம் ஆண்டில் 60,000 கோடி ரூபாயாகும். ஆனால்,



படிப்பகம்

www.padippakam.com

இதே ஆண்டில் நிதி மூலதனப் பற்றாக் குறை 37,000 கோடி ரூபாயாக இருக்கும் என மைய அரசு மதிப்பிட்டிருந்தது. 94-95-ம் ஆண்டில் 55,000 கோடி ரூபா யாக மதிப்பிடப்பட்ட இப்பற்றாக்குறை 61,000 கோடி ரூபாய் என உயர்ந்தது. நடப்பு ஆண்டில் நிதிமூலதனப் பற்றாக் குறை 71,000 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அரசின் செலவுகளுக்கு ஏற்றவாறு வருமானம் அதிகரிக்காததோடு, சுருங்கி வருவது தான் இந்நிலைக்கு முக்கிய காரணம். மைய அரசின் வருவாய்ப் பற்றாக்குறை தாராளமயமாக்கலின் முன் 2.58 சதவீத மாகும்; இன்று 3.93 சதவீதமாக இது அதி கரித்துள்ளது. பன்னாட்டு மற்றும் தரகு முதலாளித்துவ நிறுவனங்களின் மீது விதிக்கப்படும் கலால் வரியில் பல சலு கைகள் அளிக்கப்பட்டிருப்பது; அரசின் ஊதாரிச் செலவினங்கள் அதிகரித்திருப் பது - இவை இரண்டின் விளைவாகவே வருவாய்ப் பற்றாக்குறை உயர்ந்து கொண்டே செல்கிறது.

இதன் காரணமாக மைய அரசு தனது அன்றாடச் செலவினங்களைச் சமா ளிக்க உள்நாட்டு பணச் சந்தையில் இருந்து கூடுதல் வட்டிக்கு (14%) கடன் பெறுவதைத் தீவிரமாக நடைமுறைப்ப டுத்தி வருகிறது. கடந்த ஜூலை மாதம் முதல் வாரம் முடிய 18,142 கோடி ரூபாய் ரிசர்வ் வங்கியின் மூலம் கடனா கத் திரட்டப்பட்டுள்ளது. இப்பணம் முழு வதும் பெரும்பாலும் உற்பத்திசாராத செலவினங்களுக்கே பயன்படுத்தப்படு வதால், பணப் புழக்கம் அதிகமாகி பண வீக்கம் உயர்ந்துவிடும் அபாயமுள்ளது. இது மறுபுறம் பொருட்களின் விலை யினை உயரச் செய்யும். ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் உள்நாட்டுச் சந்தையில் கடன் திரட்ட முடியாத நிலை ஏற்பட்டு, தாராள மயமாக்கலின் தொடக்கத்தில் நிகழ்ந்த தைப் போலவே உலக வங்கி மற்றும் சர்வ தேச நாணய நிதியத்திடம் தட்டேந்தும் நிலையை உருவாக்கும். இப்படி மீளவே முடியாத நச்சுச் சுழலில்தான் இந்தியப் பொருளாதாரம் சிக்குண்டு போயுள்ளது.

ஆனால் மன்மோகன் சிங்கோ மக்க ளின் நலவாழ்வுத் திட்டங்களுக்குக் கூடுத லாக நிதி ஒதுக்கீடு செய்திருப்பதையும் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சம் பள உயர்வினையும் நிதி மூலதனப் பற் றாக்குற்றக்குக் காரணங்களாகக் கூறி வருகிறார். அரசு ஊழியர்களுக்கு விலை வாசி புள்ளி உயர்வுக்கு ஏற்றவாறு பஞ் சப்படியினைத்தான் மைய அரசு உயர்த் திக் கொடுத்து வருகிறது; இது முதலாளித் துவப் பொருளாதாரத்தின் தீர்க்க முடி யாத சாபக்கேடாகும். மேலும் முதலா ளித்துவ சமுதாயத்தில் அரசு இயந்திரத் தைப் பூதகரமாக வளர்த்து விரிவாக்கித் தான், அது தனது சுரண்டல் நலனைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். எனவே, மன்மோகன் சிங் கூறும் முதல் காரணம் தங்களை விழுங்க அவர்களே வளர்த்து வரும் மலைப்பாம்பாகும்.

இரண்டாவதாக, சமீபத்தில் ஆகஸ்ட் 15 அன்று பிரதமர் ராவ் ஓட்டுப் பொறுக்கும் தந்திர நோக்குடன் கவர்ச்சி வாதத் திட்டமொன்றை அறிவித்துள் ளார்; இதற்கு 4400 கோடி ரூபாய் கூடுத லாகச் செலவாகும். ஆனால் இத்திட்டத் திற்கு 1600 கோடி ரூபாயை மட்டுமே மைய அரசு ஒதுக்கியுள்ளது. மீதம் ''வரு மானம் உயர்ந்தால் ஒதுக்கப்படும்'' எனப் பாராளுமன்றத்தில் அறிவித்துவிட் டார் மன்மோகன் சிங்.

மாறாக, விவசாயிகளுக்கு வழங் கப்பட்டுவரும் உரம் - மின்சாரத்திற்கும், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த உணவுப் பொருட்க ளுக்கும், மண்ணெண்ணெய் - சமையல் எரிவாயுவுக்கும் வழங்கி வந்த மானியத் தைக் குறைத்துத்தான் தனது பணப் பையை நிரப்பி வருகிறது, மைய அரசு. கடந்த நான்கு வருடங்களில் சில பொதுத் துறை நிறுவனங்களின் கணிசமான பங்கு களைத் தனியாருக்கு விற்று 7400 கோடி ரூபாய் வருவாய் ஈட்டிக் கொண்டது. நடப்பாண்டில், இலாபத்தில் இயங்கும் ''எண்ணெய் - இயற்கை எரிவாயு நிறுவ னம்'' (ONGC), ''இந்திய இரும்புக் கனி வள ஆணையம்'' (SAIL) போன்ற நிறுவ னங்களின் பங்குகளை விற்று 7000 கோடி ரூபாய் ஈட்டத் திட்டமிட்டுள்ளது. மேலும் சாலைப் போக்குவரத்து, துறை முகம், மின்சாரம், தொலைத் தொடர்பு போன்ற அடிப்படைக் கட்டுமானத் தொழில்களில் தான் முதலீடு செய்யாது, தனியாருக்கும் - பன்னாட்டு நிறுவனங் களுக்கும் திறந்துவிட்டு நாட்டை ஏகாதி பத்தியங்களுக்கு அடிபணியச் செய்வ தில் மும்முரமாக உள்ளது.

**பொருட்கள் இல்லாத ரேசன் கடை; முடமாகிப் போன பொது விநியோகம்.**



தாராளமயமாக்கலின் சாதனையாக அந்நிய செலாவணி கையிருப்பு 2,000 கோடி டாலர் அளவுக்கு உயர்ந்திருப் பதை அடிக்கடி சுட்டிக்காட்டுகிறது ராவ் கும்பல். ஆனால், கடந்த மாதம் அமெ ரிக்க டாலருக்கு எதிராக இந்தியாவின் பண மதிப்பு ரூபாய் 31.40-லிருந்து 35.70 ரூபாயாக வீழ்ந்து போனதை ஆட் சியாளர்களால் தடுத்து நிறுத்த முடிய வில்லை. ஜெர்மனியின் ''மார்க்'', ஜப்பா னின் ''யென்''னுக்கு எதிராக அமெரிக்கா வின் டாலர் மதிப்பு சர்வதேச சந்தையில் வீழ்ந்ததால், பணத்தின் மதிப்பும் சரிந் தது. பணம் உலகச் சந்தையோடு பிணைக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள பாத கமான விளைவாகும் இது. அந்நிய செலாவணி கையிருப்பைக் கொண்டு பணத்தின் மதிப்பை அதிகரிக்க வாய்ப்பு கள் உண்டு. அப்படிச் செய்வது ஏற்றுமதி வர்த்தகத்தைப் பாதிக்கும் என்பதால் பணத்தின் மதிப்பு வீழ்வதை ஆட்சியா ளர்களால் வேடிக்கை பார்க்கத்தான் முடிந்தது.

அந்நியக் கடனாலும், அந்நிய முத லீட்டாளர்கள் இந்தியப் பங்கு சந்தையில் கொட்டிய அமெரிக்க டாலராலும்தான் அந்நிய செலாவணி கையிருப்பு உயர்ந் துள்ளது. இன்று நாட்டின் மொத்தக் கடன் 5,88,214 கோடி ரூபாய். இதில் அந்நியக் கடன் மட்டும் 2,94,500 கோடி ரூபாய். அரசின் மொத்த வருமானத்தில் 30 சதவீ தம் - 52,000 கோடி ரூபாய் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடனுக்காகவே செலவழிக்கப்படுகிறது.

அரசின் நிதிநிலை, வருவாய், பற் றாக்குறை போன்றவற்றில் கடந்த நான் காண்டுகளில் எவ்விதப் பெரிய மாற்ற மும் ஏற்பட்டுவிடவில்லை. எதிர்வரும் காலத்தில் கடனை அடைக்கவும், பற்றாக் குறைகளைச் சரிகட்டவும், எண்ணெய் இறக்குமதிக்காகவும் கிட்டத்தட்ட 1,20,000 கோடி ரூபாய் தேவைப்படும். அன்றாடச் செலவுகளுக்கே தட்டேந்தும் ஆட்சியாளர்களால் இதனை எப்படிச் சமாளிக்க முடியும்? நாட்டை அமெரிக் காவின் கையில் ஒப்படைத்துவிட்டு, அதற்குச் சலாம் போடுவது மட்டுமே அவர்களின் முன்னுள்ள ஒரே வழி!

### உணவு உற்பத்தி அபரிதம் ஏழையின் வயிற்றிலோ ஈரத்துணி

மைய அரசின் கீழ் இயங்கும் இந் திய உணவுக் கழகம் நடப்பாண்டில் 3.5 கோடி மெட்ரிக் டன் அளவிற்கு உணவுப் பொருட்களை வாங்கிச் சேமித்து வைத்தி ருக்கிறது. இது கடந்த இரண்டு ஆண்டு களை விட இரு மடங்குக்கும் அதிகமான தாகும். ஆனால் இதே காலங்களில் பொது விநியோகத் திட்டத்தின் மூலம்




படிப்பகம்

வழங்கப்பட்டிருக்கும் உணவுப் பொருட்களின் அளவு படிப்படியாகக் குறைந்து வந்துள்ளது. 91-92-ம் ஆண்டில் பொது மக்களுக்கு வழங்கப்பட்ட உணவுப் பொருட்களின் அளவு 1.87 கோடி டன்னாகும். இது 92-93-ல் 1.67 கோடி டன்னாகவும், 93-94-ல் 1.5 கோடி டன்னாகவும் கீழ் நோக்கி சரிந்து வீழ்ந்துள்ளது. நாய்க்குக் கிடைத்த தேங்காயின் கதைதான் மைய அரசின் உணவுக் கொள்கை.

இச்சரிவு பற்றி மைய அரசின் உணவுப் பொருள் வழங்கு துறை, ''மக்களிடம் வாங்கும் சக்தி குறைந்து போயுள்ளது'' எனக் கருத்து தெரிவித்துள்ளது. அதாவது மக்களை வறுமை பிடித்தாட்டத் தொடங்கியிருக்கிறது என்பதுதான் இங்கு நாசூக்காகச் சொல்லப்படுகிறது. நாட்டின் மொத்த மக்கட்தொகையில் 36.6 கோடி பேர் வறுமையில் வாடுவதாகப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. தாராளமயமாக்கலின் இந்த நான்கு ஆண்டுகளில் கிராமப்புறங்களில் வறுமை 71.04 சதவீதத்தில் இருந்து 74.64 சதவீதமாகவும், நகர்ப்புறங்களில் 73.14 சதவீதத்தில் இருந்து 74.20 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது. இதற்குத் தகுந்தவாறு தனிநபர் எடுத்துக் கொள்ள வேண்டிய உணவுப் பொருட்களின் அளவும் கணிசமாகக் குறைந்துள்ளது.

மக்களின் வாங்கும் சக்தி குறைந்து விட்டதாக நீலிக் கண்ணீர் வடித்த மைய அரசு, மறுபுறம் அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் விலையை உயர்த்தி மக்களைப் பட்டினி படுகுழிக்குள் தள்ளி வருகிறது. கடந்த நான்காண்டுகளில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ. 5.37 ஆகவும், கோதுமை ரூ. 4.32 ஆகவும் விலை உயர்ந்துள்ளன. இவ்விலை உயர்வு காரணமாகப் பொது விநியோகத் திட்டத்திற்கும் வெளிச்சந்தைக்கும் இடையே இருந்து வந்த இடைவெளி இல்லாது ஒழிக்கப்பட்டது. அதேபொழுதில் ஓட்டுப் பொறுக்குவதற்காக அறிவிக்கப்பட்ட சீரமைக்கப்பட்ட பொது விநியோகத் திட்டமும், ஆந்திர மலிவு விலை அரிசி திட்டமும் வர்த்தகச் சூதாடிகளின் - ஊழல் அதிகாரிகளின் கூட்டுக் கொள்ளைக்குத்தான் வழியேற்படுத்தித் தந்துள்ளது.



கவர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி ''போஸ்'' கொடுக்கிறார் ராவ். மன்மோகன் சிங்கோ ''நிதியில்லை'' எனக் கை விரிக்கிறார்.

''இந்தியா கிராமங்களில் வாழ்கின்றது'' என வெற்றுக் கூச்சல் எழுப்புவதில் காங்கிரசு கயவாளிகளுக்கு இணையாக வேறு யாரையும் கூற முடியாது. நடப்பு ஆண்டிற்கான வரவு - செலவு கணக்கில், ''கிராமப்புற உள்கட்டுமான வளர்ச்சி திட்டம்'' என்ற புதிய திட்டம் விவசாய வளர்ச்சிக்காக அறிவிக்கப் பட்டது; ஆனால் இத்திட்டத்திற்கான நிதி ஆதாரங்கள் தனியாக ஒதுக்கப்படவில்லை. மாறாக, ''வங்கிகள் முன்னுரிமை திட்டங்களுக்கு கடன் கொடுப்பதில் மீந்து நிற்கும் பணத்தை இத்திட்டத்தில் முதலீடு செய்யும்'' என அறிவித்தார் மன்மோகன் சிங்.

கிராமப்புற மற்றும் அடித்தட்டு மக்களின் நலன்கள் இவ்வாறு தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதன் காரணமாக, வறுமையோடு அரைகுறை பட்டினிச் சாவுகள் இந்தியாவின் பல பகுதிகளில் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. சென்ற ஆண்டு நவம்பர் மாதம் பீகாரில் தல்தோன்கன்ஞ் மாவட்டத்தில் 25 குடியானவர்கள் சத்தான உணவின்மை காரணமாக இறந்து போயுள்ளனர். மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா மாநிலங்களில் வாழும் பழங்குடி மக்களுக்கு காட்டுக் கிழங்குகள்தான் அன்றாட உணவு. இந்தியாவில் நாளொன்றுக்கு 5,000 குழந்தைகள் சத்தான உணவின்மை காரணமாக இறந்து போவதாக ஐ.நா.வின் அறிக்கையொன்று சுட்டிக் காட்டுகிறது.

> மக்களின் வாங்கும் சக்தி குறைந்து விட்டதாக நீலிக் கண்ணீர் வடித்த மைய அரசு, மறுபுறம் அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் விலையை உயர்த்தி மக்களைப் பட்டினி படுகுழிக்குள் தள்ளுகிறது.

தமிழ்நாட்டில் ஈரோட்டிலும் பள்ளிபாளையத்திலும் வாழும் விசைத்தறி தொழிலாளர்கள் கடன் சுமை தாளாது சிறுநீரகங்களை விற்கிறார்கள்; பீகாரிலும், மேற்கு வங்கத்திலும், ஆந்திராவிலும் கிராமப்புற வறிய மக்கள் பிஞ்சுக் குழந்தைகளையும் வயதுக்கு வந்த இளம் பெண்களையும் விற்று வறுமையோடு போராடுகிறார்கள். அடுத்த வேளை உணவுக்கே ரேஷன் அட்டைகளை அடமானம் வைக்க வேண்டிய அவலம் நிறைந்தது பழங்குடிகளின் வாழ்வு.

நாட்டின் கோடானுகோடி மக்கள் ''வாழ்வா? சாவா?'' எனப் போராடுகையில் கையளவேயான மேட்டுக்குடிக் கும்பலோ உல்லாசத்தில் மூழ்கித் திளைக்கிறது; அவர்களின் தாகம் தணிக்க தாதுநீர்ப் புட்டிகளும் பெப்சி கோலாவும் ஆறாகப் பெருகி ஓடுகிறது. இந்திய உணவு அலுத்துப் போனதால், அமெரிக்க துரித உணவுக் கூடங்கள் திறக்கப்படுகின்றன; தங்க இழை கோர்த்த ஆடைகளும் ஆடம்பர அழகு சாதனப் பொருட்களும், சந்தையில் நிரம்பி வழிகின்றன.

இந்தியாவையே அமெரிக்காவாக மாற்ற ''தாராளமயமாக்கலைத் தீவிரமாக்கு'' எனக் கட்டளையிடுகிறது அக்கும்பல். ''இதோ'' என மேற்கு நாடுகளுக்கு ஓடிப்போய் நாட்டை அடகு வைத்துத் திரும்புகின்றன ஓட்டுக்கட்சிகள். மேட்டுக்குடிக் கும்பலின் இக்கூக்குரல் நமது நாட்டு தொழிலாளர்களின், விவசாயிகளின், நெசவாளர்களின் கழுத்தில் விழும் சுருக்கு. அக்குரல் எழும்பும் சங்கை அறுத்தெறியாமல் நமது நாடும் நாமும் ஓர் அடிகூட முன்னேற முடியாது.

● ரஹீம்



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# கம்யூனிசம் தோற்றதாம்! முதலாளித்துவம் வென்றதா?

"**மா**ஸ்கோவில் உள்ள அந்த வேசிமகன்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்? ஆஃப்கானில் நான் போரிட்ட போது, அது என் தாய் நாட்டைக் காப்பதற்கான போர் என்று நம்பினேன். இப்போது எந்த நம்பிக்கையோடு நான் போரிடுவேன்?" - இன்று ருசியாவை ஆளும் யெல்ட்சின் கும்பலுக்கு எதிராகத்தான் இப்படி ஆத்திரம் பொங்கக் குமுறுகிறார், ருசிய இராணுவ அதிகாரி ஒருவர். ஏன்? ருசியக் கூட்டரசின் கீழ் உள்ள 89 தேசிய சிறுபான்மை இனங்களில் ஒன்றான செசனியர்களின் சுதந்திரத்துக்கான - ஜனநாயகத்துக்கான போராட்டத்தை ஒடுக்குவதற்கு ஏவிவிடப்பட்ட ருசிய இராணுவத்தின் பீரங்கி வண்டிப் படைப்பிரிவின் தளபதி அவர்.

4000 படை வீரர்களைக் கொண்ட ஒரு "ரெஜிமெண்டை" விமானத்தில் இருந்து இறக்கி விட்டால் போதும்; இரண்டே மணி நேரத்தில் செசன்யாவின் தலைநகர் குரோஸ்னியைக் கைப்பற்றிவிடலாம். அதன் மூலம் 12 இலட்சம் மக்கள் வாழும் செசன்ய சுயாட்சி மாநிலத்தை தன் முழுக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விடலாம் என்று ருசிய அதிபர் யேல்ட்சினும் இராணுவ அமைச்சர் பாவெல் கிரெசேவும் துச்சமாக எண்ணினர். எதற்கும் முன்னெச்சரிக்கையாக 40,000 துருப்புக்களைக் கொண்ட பீரங்கிக் கவச வண்டிப்படையை ஏவினர்; மக்கள் நெருக்கமாக வாழும் குடியிருப்புப் பகுதிகள் மீது நெருப்புக் குண்டு மழை பொழிந்தனர். ஆனால் இந்திய இராணுவம் யாழ்நகருக்குள் விண்ணில் இருந்து சிப்பாய்களை இறக்கிவிட்டபோது நடந்ததைப் போல குரோஸ்னிக்குள் நுழைந்த போது ருசியப்படைகள் பலிகடாவாகிப் போனார்கள். "பலிகடா" என்பதன் நேரான பொருளில் - துப்பாக்கிப் படைப் பிரிவின் முன் நிறுத்தப்படும் மரண தண்டனைக் குற்றவாளிகளைப் போல ருசியப் படை வீரர்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

இப்படி ருசிய இராணுவம் தம் சொந்த நாட்டு மக்களைக் கொன்று குவிப்பதையும், தனது படையினரே வெட்கக் கேடான முறையில் செத்து மடிவதையும் முதன் முறையாக நேரடி ஒளிபரப்பு மூலம் வானொளியில் கண்டு ருசிய மக்கள் வெறுப்பும் ஆத்திரமுமடைந்தனர். ஒரே வாரத்தில் இந்தப் போர் 15,000 பேரைக் காவுக் கொண்டது. லட்சக் கணக் கானோர் வீடு வாசல்களை இழந்து அகதிகளாகினர். செசன்யர்களும் தொடரும் ருசிய இராணுவத் தாக்குதலைக் கண்டஞ்சி அடிபணிவதாக இல்லை. மலைகள் - காடுகளுக்குப் பின்வாங்கி அதிரடிப் போரைத் தொடருகின்றனர். அமெரிக்காவுக்கு வியத்நாமைப் போல, இந்தியாவுக்கு காஷ்மீரைப் போல, இலங்கைக்கு ஈழத்தைப் போல, ஏன் ருசியாவுக்கே இன்னொரு ஆஃப்கான் போரைப் போல, ருசிய இராணுவம் செசன்யப் புதை சேறில் சிக்கிக் கொண்டது.

"ஸ்டாலினிய சர்வாதிகாரத்தை முற்றாக அகற்றியதில் கோர்பச்சேவை விட துணிச்சலான ஜனநாயக - சீர்திருத்த சிற்பி" என்று அமெரிக்கா மற்றும் பிற ஏகாதிபத்தியங்களால் போற்றப்படும் யேல்ட்சினின் சுயவடிவம் செசன்யா போரில் அப்பட்டமாக வெளிப்பட்டது. சோவியத் ஒன்றியத்தைப் பிளந்து பலவீனப்படுத்துவதில் உடந்தையாக இருந்து தூண்டிய அந்த மேலை ஏகாதிபத்தியங்கள், செசன்யாவின் தனி தேச விடுதலைப் போரை ஒடுக்குவதில் மறைமுகமாக யேல்ட்சினை ஆதரிக்கின்றன. யேல்ட்சினை ஆதரிக்கவில்லையென்றால் ருசியாவில் நடக்கும் சீர்திருத்தம் நின்று போய்விடும், பழைய கம்யூனிஸ்டுகளின் கை ஓங்கிவிடும் "செசன்யா பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும்" என்று கூறும் ஏகாதிபத்தியங்கள், ருசிய கூட்டமைப்பு பிளவுபடுவதைத் தாம் ஆதரிக்கவில்லை என்கின்றனர்; அதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்றாக அமெரிக்கா தெற்கே மெக்சிகோ இனமக்கள் வாழும் தென் பகுதியிலும், கனடா கியூப்செக்கிலும், பிரிட்டன் அயர்லாந்திலும் மற்றும் ஸ்பெயின், பிரான்சு நாடுகளும் இதே பிரச்சினையை எதிர் கொண்டு, சிறுபான்மை தேசிய இன மக்களை ஒடுக்கி வருவதாகும்.

> முன்னாள் சோசலிச நாடுகளில் எங்கும் குழப்பமும் கொந்தளிப்பும் நிலையற்ற அரசியல் பதட்டமும் நிலவுவதைப் பயன்படுத்தி போலி கம்யூனிஸ்டுகளே மீண்டும் ஆட்சியைப் பிடிக்கிறார்கள்.

முன்னாள் சோசலிச நாடுகளில் "கம்யூனிச சர்வாதிகாரத்துக்கு மாற்றாக" முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகத்தை நிறுவுவதாக ஏகாதிபத்தியங்களும் யேல்ட்சின் கும்பலும் பீற்றிக் கொள்வது வெறும் சவடால்தான்; அரசியல் பித்தலாட்டம்தான் என்பதை இந்த செசன்யாப்போரும், அதற்கான மூலகாரணமும், விளைவுகளும் வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டன. ஜனநாயகம் என்கிற பெயரால் அங்கு நடப்பதெல்லாம் தீராத அதிகார வெறிச் சண்டைகளும், துரோகங்கள் - கழுத்தறுப்புகளும், பாசிச ஒடுக்குமுறைகளும், அதனிலும் இழிவான கழிசடை - கிரிமினல் கும்பல்களின் ஆதிக்கமும்தான். அராஜகமும் குழப்பமும் நிலையற்ற அரசியல் நெருக்கடியும் ஏற்படுவதைப் பயன்படுத்திக் கொண்டு முன்னாள் போலிக் கம்யூனிஸ்டுகளும், முன்னாள் இராணுவத் தளபதிகளும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதாகவே முடிகிறது. இதற்கிடையே வளர்ந்து நிலை பெற்றுவிட்ட கிரிமினல் மாஃபியாக் கும்பல்களின் வன்முறை வெறியாட்டம், முன்னாள் சோசலிச நாடுகளை மட்டுமல்ல, ஏகாதிபத்தியங்கள் அனைத்துக்கும் குலை நடுக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது.

செசன்யா உதாரணத்தையே பாருங்கள். மேற்கு ஏகாதிபத்தியத்துக்குத் தகவாக சோவியத் ஒன்றியத்தை மாற்றிய மைத்த மறுசீரமைப்பு இயக்கம் தீவிரமாக நடந்து கொண்டிருந்த 1989-ஆம் ஆண்டு செசன்யா - இங்குஸ் சுயாட்சி மாநிலத்தின் போலிக் கம்யூனிஸ்டு கட்சியின் முதல் செயலாளராக தோக்கு ஜவ்கயேவை நியமித்தது, கோர்பி கும்பல். அதன் நிர்வாகம் முழுவதும் ஜவ்கயேவிடம் குவிந்திருந்தது. ஆனால் அவரது தலைமையிலான சுப்ரீம் சோவியத்துக்கு சவாலாக - போட்டி அதிகாரமையமாக செசன் - தேசிய காங்கிரசை அமைத்தது, செசன் - இங்குஸ் இனத்தைக் குறிக்கும் வைனாக் ஜனநாயகக் கட்சி. அப்போது சோவியத் ஒன்றியக் குடியரசுகள் எல்லாம் சுயாதிபத்திய சுதந்திர, அரசாகப் பிரகடனம் செய்து கொண்டதைப் போல செசன் - இங்குஸ் சுயாட்சி மாநிலமும் தனி அரசாக அக்கட்சி அறிவித்தது. ருசிய விமானப் படையின் மேஜர் - ஜெனரலாக இருந்த தஜோகர் துதாயேவ் செசன் தேசியக் காங்கிரசின் நிர்வாகக் குழுவின் தலைவராக்கப்பட்டு கோர்பியின் எடுபிடி ஜவ்கயேவின் அதிகாரத்தை வீழ்த்தும் முயற்சியில் இறங்கினார். கோர்பி கும்பலிடமிருந்து அதிகா



படிப்பகம்

www.padippakam.com

ரத்தைப் பறிக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக ருசிய கூட்டமைப்பைத் தனி அரசாக அறிவித்த போலி தேசிய இன வெறியன் யேல்ட்சின், துதாயேவை ஆதரித்தார்.

1991-இல் கோர்பிக்கு எதிராக நடந்த பிரஷ்னேவைட் போலிக் கம்யூனிஸ்டுகளின் அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பு தோல்வியுற்றதைப் பயன்படுத்திக் கொண்டு, ருசியாவின் முழு அதிகாரத்தைக் கைப்பற்றியது யேல்ட்சின் கும்பல். அதன் பிரதிநிதிகளாக உள்துறை மந்திரி, செய்தி - தகவல் துறை மந்திரி ஆகியோரோடு ருசிய நாடாளுமன்றத் தலைவரும் செசன்யருமான கஸ்புலாடோவ் குரோஸ்னி போய்ச் சேர்ந்தார். அவர்களது தூண்டுதலால் கோர்பியின் எடுபிடி ஜாவ்கயேவின் அதிகார மையமான சுப்ரீம் சோவியத்தை துதாயேவின் படைகள் சூழ்ந்து கொண்ட அதேசமயம், யேல்ட்சின் - கஸ்புலாடோவ் கும்பல் செசன் சுப்ரீம் சோவியத்தைக் கலைத்து ஜாவ்கயேவின் அதிகாரத்தை வீழ்த்தியது. அதன் பின் யேல்ட்சின், கஸ்புலாடோவ், துதாயேவ் ஆகியோரிடையே அதிகாரத்துக்கான முக்கோணப் போட்டியில் ஆட்சிக் கவிழ்ப்புகளும், தீராத சண்டைகளுமே செசன்யாவின் வரலாறாக உள்ளது.



குரோஸ்னியில் பத்திரிகையாளர்களுக்கு சகாக்களுடன் பேட்டியளிக்கும் செசன்யா தலைவர் துதாயேவ்.

கோர்பியின் எடுபிடி ஜாவ்கயேவை வீழ்த்தியதோடு, களத்தில் இருந்து விலகிக் கொள்ளும்படி துதாயேவுக்குக் கட்டளையிட்டது யேல்ட்சின் - கஸ்புலாடோவ் கூட்டுக் கும்பல். செசன்யாவில் அதிகாரத்தை மேற்கொள்வதற்காக கஸ்புலாட்டோவ் எடுபிடி யூரி செர்னி என்பவன் தலைமையில் மாநில சுப்ரீம் கவுன்சிலையும் நிறுவியது. ஆனால் அதற்குப் பணிய மறுத்து அதிகாரத்தை சுவைத்துவிட்ட துதாயேவ், செசன்ய மக்கள் தேசியப் பொதுப் பேரவையின் பெயரால் ஆட்சியைத் தொடர்ந்து நடத்தி வந்தார். யேல்ட்சின் - கஸ்புலாடோவ் கிளப்பிவிட்ட தீவிரதேசியவாத பூதமாகிய துதாயேவ், அவர்களுக்கு எதிராகவே திரும்பியது. தனியான தேசியக் காவற்படை திரட்டியது; தேர்தல் நடத்தி துதாயேவை செசன்யாவின் அதிபராக அறிவித்தது. அது போலித் தேர்தல் என்று நிராகரித்த மாஸ்கோ கும்பல் செசன்ய - இங்குஸ் சுயாட்சி மாநிலத்தில் அவசர நிலையைப் பிரகடனம் செய்தது. அதற்கு பதிலடியாக இராணுவச் சட்டத்தைப் பிரகடனம் செய்தார், துதாயேவ். அவரை ஒடுக்குவதற்கு மாஸ்கோ படையை ஏவும் என்கிற பீதி, துதாயேவின் நிலையை உறுதிப்படுத்தும் வகையில் செசன்யர்களை அவர்பின் திரள்வதற்குக் காரணமாக அமைந்தது.

1992 ஆரம்பத்தில், துதாயேவுக்கு செசன்ய தேசியவாதிகளிடமே எதிர்ப்புக் கிளம்பி, ஆயுதந்தாங்கிய ஆட்சிக் கவிழ்ப்புக்கு ஒரு பிரிவு முயன்றது. துதாயேவ் அதை ஒடுக்கிய கையோடு செசன்ய நாடாளுமன்றத்தைக் கலைத்து, எதிர்த்தரப்புகளை ஒடுக்கி சர்வாதிகாரியானார். இதன் விளைவாக துதாயேவுக்கு எதிராக ஆயுதந்தாங்கியப் பல குழுக்கள் உருவாகின. தலைநகர் குரேஸ்னியிலும், மலைப்பிரதேசங்களிலும் நிலையிட்டுள்ள அதே சமயம், சமவெளிப் பகுதிகளில் ஆங்காங்கே பிறகுழுக்கள் ஆதிக்கம் வகிக்கின்றன. அவற்றின் மீது துதாயேவ் அடிக்கடி படையெடுத்து ஏறக்குறையப் உள்நாட்டுப் போர் நிலையை எட்டியது.

1994 மத்தியில் இந்தக் குழுக்கள் அவ்துர்கானோவ் தலைமையில் ஒருங்கிணைந்து ஒரு பெருந்தாக்குதல் தொடுத்ததோடு, மூன்றாண்டுகளுக்கு முன்பு யேல்ட்சினால் தூக்கியெறியப்பட்ட ஜாவ்கயேவ், முன்னாள் சோவியத் ஒன்றிய உளவு நிறுவன அதிகாரிகள் பலரும் இணைந்து ஒரு புதிய தற்காலிக அரசாங்கத்தை நிறுவினர். பிரஷ்னேவைட்டுகள், கோர்பி கும்பலைச் சேர்ந்தவர்கள், இன்றைய ருசிய இனவெறியன் ஜெரினோவ்ஸ்கியைப் போன்றவர்கள் அடங்கிய இந்தத் தற்காலிக அரசாங்கத்தை ஜனநாயக சீர்திருத்த நாடகமாடும் யேல்ட்சின் கும்பலும் ஆதரித்தது. துதாயேவை வீழ்த்தி இந்தக் கும்பலை அதிகாரத்தில் அமர்த்தத்தான் செசன்யாவின் மீது போர் தொடுத்தது ருசிய இராணுவம். இதில் வியப்பு - வினோதம் என்னவென்றால் ஓராண்டுக்கு முன்பு (1993 அக்டோபரில்) ஜனநாயகத்தைக் காப்பது என்கிற பெயரில் எந்த சுப்ரீம் சோவியத் அமைப்பை இராணுவத் தாக்குதல் நடத்தி யேல்ட்சின் கும்பல் கலைத்ததோ, அதையே ஓராண்டுக்குப் பின் செசன்யாவின் இராணுவ ஆதிக்கத்தைக் கொண்டு நிறுவும் வேலையில் இறங்கியது. அப்போது ஸ்டாலினிசவாதி என்று சாடி தூக்கியெறியப்பட்ட அதே காஸ்புலாடோவுடன் இப்போது கூட்டுச் சேர்ந்து முன்பு தான் ஆதரித்த துதாயேவை இப்போது கிரிமினல் மஃபியா கும்பல் என சாடி வீழ்த்தப் படை ஏவினார், யேல்ட்சின்.

துதாயேவும்கூட மாஸ்கோவில் ஆதிக்கம் வகிக்கும் ருசிய இன ஆளும் பிரிவுகளில் சிலவற்றுடன் நெருக்கமாகவே கூட்டுச் சேர்ந்துள்ளார். செசன்யாவைக் கட்டுப்படுத்துவது அரசியல், பொருளாதார ரீதியில் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்தது. கிழக்கே சைபீரியாவில் இருந்து காஸ்பியன் கடற்தளங்கள், மேற்கு ருசியாவில் உள்ள எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைகள் வரை பிரதான எண்ணெய்க் குழாய்கள் செசன்யா வழியாகவே போகின்றன. மேலும் செசன்யாவிலேயே எண்ணெய் - எரிவாயு, சுத்திகரிப்பு - உயர்தர விமான பெட்ரோல் எண்ணெய் வளமும் மூலாதாரங்களும் உண்டு. மிக நவீன பன்னாட்டு விமான நிலைய வசதி மிக்க்து. இதனால் ருசியாவில் உள்ள பன்னாட்டு கிரிமினல் மஃபியா கும்பல்கள் எண்ணெய், ஆயுதக் கள்ள விற்பனை ஏற்றுமதிக்கும், ரொக்கப் பணம் கடத்தலுக்கும் (ஹவாலா) மையமாக செசன்யா விளங்குகிறது. எனவே ருசியாவில் ஆதிக்கம் வகிக்கும் கிரிமினல் கும்பல்களில் சில துதாயேவுடன் கள்ளக் கூட்டுச் சேர்ந்து நிதி உதவியும், தனியார் படையும், ஆயுதங்களும் கொடுக்கின்றன. இன்னும் சில, துதாயேவ் கும்பலையே பிளவுபடுத்திக் கட்சி மாறச் செய்கின்றன. துதாயேவ் கும்பலின் கட்டுப்பாட்டில் வரமறுக்கும் வேறு பிற ஆயுதந்தாங்கிய கும்பல்கள் செசன்ய தேசியத்தின் பெயரால் திரண்டுள்ளன.

உதாரணமாக, ருசியாவில் உள்ள புதயோன்னவ்ஸ்கி நகர மருத்துவமனை மீது அதிரடி தாக்குதல் நடத்தி 1000 ருசிய நோயாளிகளைப் பிணைக் கைதிகளாய்ப் பிடித்து, தமது கோரிக்கையை ஏற்கும்படி யேல்ட்சினைப் பணிய வைத்த ஷமில் பாசயேவ் கும்பல். இவன் 1991 ஆகஸ்டில் பிரஷ்னேவைட்டுகள் நடத்திய அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பை எதிர்த்து யேல்ட்சின் கும்பலுக்குத் துணையாக நின்று வெள்ளைமாளிகை மீது ஆயுததாக்குதல் தொடுத்த படைக்குத் தலைமை தாங்கினான். அதேபோல, 1991 இல் கோர்பி



படிப்பகம்

www.padippakam.com

யின் எடுபிடி ஜாவ்கியேவை அதிகாரத்தில் இருந்து துரத்திய ''செசன்ய புரட்சி''யில் யேல்ட்சின் - துதாயேவ் கூட்டுக்கு ஏவலாளாக இருந்தான். 1992 ஆகஸ்டில் யேல்ட்சினுடைய கட்டளையை ஏற்று ஜியார்ஜியாவுக்கு எதிராக அபாக்சிய மக்கள் படைக்குழுவுக்குத் தலைமையேற்றான். பின்னர் அபாக்சிய சுயாட்சிப் பிரதேச அரசின் இராணுவத் துணை மந்திரியாகவும், அதன் இராணுவத் தலைமைத் தளபதியின் ஆலோசகராகவும் இருந்தான். அப்போதெல்லாம் யேல்ட்சின் கும்பலின் எடுபிடியாக இருந்த இந்த ஷமில் பாசயேவ், இப்போது தனிப்படை கட்டிக் கொண்டு, தனது முன்னாள் ''வளர்ப்புத் தந்தை''க்கே சவால் விடுகிறான்.

செசன்யாவில் நடக்கும் இந்த நாய்ச் சண்டையைப் போன்றதுதான் அதன் மூல மையமான ருசியாவிலும், பிற முன்னாள் சோவியத் ஒன்றியம் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் அரசியல் வரலாறாக உள்ளது. எங்கும் பிரஷ்னேவைட் போலிக் கம்யூனிஸ்டுகளை வீழ்த்தி விட்டு, கோர்பச்சேவ் பாணி போலிக் கம்யூனிஸ்டுகள் அதிகாரத்தைப் பிடித்தனர். இந்த இரண்டு பிரிவு போலிக் கம்யூனிஸ்டுகளுக்கிடையிலான அதிகாரத்துக்கான சண்டையைப் பயன்படுத்திக் கொண்டு யேல்ட்சினைப் போன்ற போலி தேசிய, போலி ஜனநாயகவாதிகள் அதிகாரத்தைக் கைப்பற்றினர். இவர்கள் தமது அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்கு முன்பாகவே அதீத தேசிய வெறியும் அப்பட்டமான பாசிச சர்வாதிகாரமும் பேசும் ஜெரினோவ்ஸ்கிகள் சவாலாக வளர்ந்துவிட்டனர். அதேசமயம் தோல்வியுற்ற சக்திகள் எதுவுமே முற்றாக அரசியல் அரங்கில் இருந்து அழிந்துவிடவோ, ஒதுங்கிவிடவோ இல்லை. அவை தனித்தனி அரசியல் சக்திகளாக மட்டுமல்ல, ஆயுதந்தாங்கிய தனித்தனிப் படைகளின் பின்பலத்தோடு இயங்குகின்றன. இவை தேர்தல் மூலமோகவோ, அதிரடி ஆட்சி கவிழ்ப்பு மூலமோ அதிகாரத்தைக் கைப்பற்றும் சதிகளில் ஈடுபட்டிருக்கும் அதேசமயம், கிரிமினல் மாஃபியா கும்பல்கள் மூலம் அந்தந்த நாடுகளின் அதிகாரத்தையும், செல்வாதாரத்தையும் சாத்தியமான அளவு கூறுபோட்டுக் கொண்டு விட்டன.

சுருக்கமாகச் சொன்னால், ஏற்கனவே அதிகாரத்தில் இருந்து துரத்தப்பட்ட பல்வேறு வண்ணப் போலிக் கம்யூனிஸ்டுகளான கெனாடி யானயேவ், பாவ்லாவ், ருட்ஸ்கோய், கஸ்புலாடோவ், கோர்பச்சேவ் மட்டுமல்ல, பாசிச வெறியன் ஜெரினாவ்ஸ்கி என பல கும்பல்களும் அதிகாரத்தைக் கைப்பற்றத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். எங்கும் குழப்பமும், கொந்தளிப்பும், நிலையற்ற அரசியல் பதட்டமும் நிலவுவதைப் பயன்படுத்தி முன்னாள் ஆட்சியாளர்களான போலிக் கம்யூனிஸ்டுகளே மீண்டும் ஆட்சியைப் பிடிக்கிறார்கள். ஜனநாயக, தேசியவாத நாடகமாடும் யேல்ட்சின் கும்பலோ தனது அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்ள இந்தப்போக்குக்குத் துணை போகிறது.

சோவியத் ஒன்றியத்தில் இருந்து முதன்முறையாகப் பிரிந்து போன லாட்வியா, எஸ்தோனியா, லித்துவேனியா ஆகிய குடியரசுகளில், பிரிவினைக்குத் தலைமையேற்ற தேசியவாதக் கட்சிகள் எல்லாம் நிராகரிக்கப்பட்டுவிட்டன. இன்னமும் தேசியவாத நாடகமாடும் பிரஷ்னேவைட்டு போலிக் கம்யூனிஸ்டுகள், புதிய கட்சி நாமகரணம் சூட்டிக் கொண்டு ஆட்சியைக் கைப்பற்றி விட்டனர். 1991 டிசம்பரில் யேல்ட்சினுடன் கூடி சதிசெய்து, சோவியத் ஒன்றியத்தைப் பிளவுபடுத்திய உக்ரெய்னின் அதிபர் லியோனிட் கிராவ்சுக் விரட்டப்பட்டு, பிரஷ்னேவைட்டான லியோனிட் குசுமா அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு விட்டார். ருசியாவுடன் நெருங்கிய உறவை ஆதரிக்கும் இவருடைய கொள்கைக்கு ஆதரவு திரட்டும் வகையில் செர்னோபில் அணு உலை விபத்துக்கு நட்டஈடாக 4000 கோடி டாலர் நிதி அளித்தது யேல்ட்சின் கும்பல். அதேபோல பைலோருசியா தனிநாடாகக் காரணமாக இருந்த பிரதமர் வையா செஸ்லாவ் கேபிச் துரத்தப்பட்டு யேல்ட்சின் - பிரஷ்னேவ் கும்பலைச் சேர்ந்தவர் அதிகாரத்துக்கு வந்துள்ளார்.

நகர்னோ-கராபாக் பிராந்தியத்திற்காக அர்மேனியா - அஜர்பைஜானுக்கிடையிலான காகசியப் போரில் யேல்ட்சினின் ருசியா அர்மேனியாவை ஆதரித்தது; துருக்கி ஆதரவு பெற்ற அஜர்பைஜானின் அதிபர் அபுஃபாஸ் எல்சியேயை ஒரு அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் வீழ்த்திவிட்டு பிரஷ்னேவைட்டான கைதார் அலியேவை ஆட்சியில் அமர்த்தியது. அதேபோல, 1992 ஏப்ரலில் ஜியார்ஜிய தேசியவாதி கசேகுர்தியா அரசை வீழ்த்தி கோர்பி கும்பலைச் சேர்ந்த எட்வர்டு செவர்னாட்சேயை அதிகாரத்துக்கு கொண்டு வந்தது. பின்னர் ஜார்ஜியாவில் இருந்து அங்காசியா பிரிந்து போவதற்கு 1992-94 போரில் இரண்டு தரப்பையும் யேல்ட்சினின் ருசிய அரசு ஆதரித்தது.

ஆக, முன்னாள் சோசலிச நாடுகளில் அரசியல் ரீதியில் கம்யூனிசத்தை வீழ்த்த தேசியத்தையும், ஜனநாயகத்தையும் நிலைநாட்டப் போவதாக ஏகாதிபத்தியங்களும் அவற்றின் உள்நாட்டு பங்காளிகளும் அடித்த சவடால்கள் எல்லாம் வேறு மாதிரிதான் முடிந்துள்ளது. அங்கெல்லாம் தூக்கியெறியப்பட்ட போலிக் கம்யூனிஸ்டுகளும், கிரிமினல் மஃபியா கும்பல்களும் தான் அதிகாரத்தைக் கூறுபோட்டுக் கொண்டுள்ளனர். ருமேனியா, பல்கேரியா, அல்பேனியா, போலந்து என்று கிழக்கு ஐரோப்பிய மற்றும் யுரேசிய நாடுகளின் கதையும் இதுதான். பொருளாதார ரீதியில் கூட ஒழுங்கமைக்கப்பட்ட கூட்டுப்பங்கு தொழில் கழகங்கள் ஏற்படவில்லை; மாறாக, கிரிமினல் மஃபியா முறையில் ஒருங்கமைக்கப்பட்ட பெரு முதலாளிகளே தோன்றி நிலை பெற்று வருகின்றனர்.

**(தொடரும்)**



**தமது ராணுவப் படையினர் சடலத்தை வானொளியில் பார்த்த ருசிய மக்கள் வெறுப்பும் ஆத்திரமுமடைந்தனர்.**

Published and Owned by R. SHANMUGARAJ, 25, Arunachalam St., Jothiramalinga Nagar, Madras - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63, Arcot Rd., Madras - 600 024. Editor: R. SHANMUGA RAJ

www.padippakam.com



# இதுதான் இன்றைய இந்தியா

அருகிலுள்ள இந்தப் படம் அறிவின் இடத்தை மூடத்தனம் ஆக்கிரமித்துக் கொண்டு வருவதற்கு எடுப்பான சான்று. ''உயிருள்ளவை மட்டும்தான் உணவு உட்கொள்ளும்'' - இந்த எளிமையான, அன்றாட வாழ்வில் காணக்கூடிய அறிவியல் உண்மை கடந்த செப்டம்பர் மாதம் ஒரு நாள் இந்துக்களில் பலருக்கு மறந்து போனது. அன்று 'பிள்ளையார் பால் குடிக்கிறார்' என்ற வதந்தி காட்டுத்தீயாய் நாடெங்கும் பரவியது. பாமரர்கள்தான் என்றில்லை; படித்தவர்களும் ஒரு கையில் பால் சொம்பும் மறு கையில் சிறு கரண்டியுமாக கோயில் சந்நதிகளையும் முச்சந்தி பிள்ளையார்களையும் தேடிக் கொண்டு ஓடினார்கள். கரண்டியில் இருந்து பால் மறைந்து போன பொழுது, கொடுத்தவர்கள் தாங்கள் 'ஆசிர்வதிக்கப்பட்டதாய்' மாய்ந்து போனார்கள். இந்து மதவெறி அமைப்புகளின் தலைவர்கள் ''கடவுள், தான் இருப்பதைக் காட்டிவிட்டார்'' எனக் கூப்பாடு போட்டார்கள். அறிவியல் அறிஞர்கள் இந்த 'அற்புதத்தின்' மாயத்திரையை விலக்கிக் காட்டி, இம்மூடப்பரவசத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார்கள்.

சென்னையில் இந்த வருடம் பிள்ளையார் ஊர்வலம் நடந்தபொழுது முஸ்லீம்கள் நிறைந்த திருவல்லிக்கேணிப் பகுதியில் பதற்றச்சூழல் ஏற்பட்ட காட்சியிது. முஸ்லீம்களின் தொழுகைக்கு இடையூறின்றித் தாமதித்துச் செல்ல மறுத்துப் பதற்றத்தை ஏற்படுத்தினர் இந்த மதவெறியர்கள். அப்பகுதியில் வீடொன்றையும் வாகனமொன்றையும் தீயிட்டுக் கொளுத்தியது அவ்வன்முறைக் கும்பல். சந்து பொந்துகளில் மறைந்து கொண்டு கற்களையும் டியூப்லைட்டுகளையும் கொண்டு எதிர்த்தாக்குதல் தொடுத்தார்கள் அவர்கள். போலீசோ இந்து மதவெறியர்களை விரட்டுகிறேன் என்ற பெயரில் அப்பாவி பொதுமக்களையும் சேர்த்துத் தாக்கியது; பிள்ளையார் பொம்மைகளைப் பக்தியோடு இழுத்துச் சென்று கடலில் கரைத்தது. சென்னையில் பதற்றத்தோடு தணிந்துபோன ஊர்வலம், ஹைதராபாத் நகரில் வன்முறைக் கலவரமாக உருவெடுத்து, நான்கு பேரைப் பலி கொண்டு அடங்கியது.



இறை நம்பிக்கையில் விஞ்ஞானப் புதிர்களை 'அற்புதம்' என நம்பும் அப்பாவி மக்கள் ஒரு புறம்; மறுபுறமோ இந்த இறை - மத நம்பிக்கையைச் சாதகமாக்க் கொண்டு, ''எழுச்சியுறு இந்துவே!' என வெறிக் கூச்சல் போடும் இந்து வெறியர்கள். பகுத்தறிவு கொண்டு இவ்விஷத் தேளின் கொடுக்குகளை வெட்டியெறியப் போகிறோமா? அல்லது இவர்களின் கைப்பாவைகளாக மோதிக் கொள்ளப் போகிறோமா?

படிப்பகம்